# செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு - ௩ 3 பரல் - ௰ 1

சித்திரை - வைகாசி

1925

SL.
0311m211, N22
.N25 3.10
166172


446
9 - JUN 1926
MADRAS



# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௩ } துரோதன ஐப்பசி மீ { பரல் ௰





உள்ளுரை

இறையனாரகப்பொருள் ௪௧௭
சேக்கிழார் செய்யுளின் தெய்வ நலம் ௪௨௪
அகம் புறம் ௪௨௯
முடங்கல் ௪௩௩
நம்பியாண்டார் நம்பிகளும் இராஜ இராஜ சோழனும் ௪௩௭
திருக்கோயில்களில் சில திருத்தங்கள் ௪௪௬
ஆசுவயுஜமும் ஐப்பசியும் ஒரே மாதம் ௪௫௰
இமயத்தில் புலிக்கொடி பொறித்தது ௪௯௰
தமிழர் கலைக்கழகம் ௪௯௨



**The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd.**

ஆண்டுக் கையொப்பம் ரூ 3. தனிப்பரல் அணா 6

*All Rights Reserved*

## 'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

## (Editorial Board Members)

தலைவர் :

1. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.
அட்வகேட், நியாய கலாசாலைப் பேராசிரியர், சென்னை.

2 ,, ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B.A., L.T.
பாடசாலை டெப்டி இன்ஸ்பெக்டர்,
சைதாப்பேட்டை பிரிவு.

3. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், ஹீபர் கலாசாலை,
திருச்சிராப்பள்ளி.

4. ,, துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஹாரூர்,
சேலம்.

5 ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

6 ,, வித்வான் மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
மகிபாலன்பட்டி.

7. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A.,
வக்கீல், சாத்தூர்.

8. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

## கையொப்ப விபரம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய உள்நாடுகளுக்கு ஆண்டுக் கையொப்பம் | 3 | 0 |
| கழகப் பங்காளிகளுக்கும், மாணவர்களுக்கும் ,, | 2 | 8 |
| வெளிநாடுகளுக்கு ,, | 3 | 8 |

மாதிரிப் பிரதி விலை 4 அணா

குறிப்பு:—பினாங், சிங்கப்பூர் தவிர பிற வெளிநாடுகளிலுள்ளவர்கள முன்பண மனுப்பியே பத்திரிகையினைப் பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங்கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற்கு எழுதுக.

---

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
சென்னை & திருநெல்வேலி

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

**திங்கள்தோறும் வெளிவருவது**

| | | |
|---|---|---|
| சிலம்பு ௫ | மெய்கண்டான் ஆண்டு-எாகூ ஐப்பசித் திங்கள் 1925ஞு அக்டோபர்—நவம்பர்மூ | பரல் ௰ |

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

## இறையனார் அகப்பொருள்

[கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L.]

(௪௮௨-ம் பக்கத் தொடர்ச்சி)

நயப்பு

காட்சிக்குப் பின் குறிப்பறிதலென்பது மாத்திரம் தலைமகளது உட்கோளை விளக்குமெய்ப்பாடுகளின் வைத்து திருவள்ளுவ நாயனாரால் கூறப்பட்டுள்ளது. அதற்குப் பின்பு ணர்ச்சி மகிழ்தலே திருக்குறளுட் காணப்படுகின்றது. குறிப்பறிதற்கு முன் தெளிவு, நயப்பு, தெய்வமகிழ்தல், புணர்ச்சி துணிதல்

முதலிய துறைகள் திருக்கோவையாருட் கூறப்பட்டன. அவற்றைத் திருக்குறளாசிரியர் இயம்பவில்லை. தொல்காப்பிய நூலுள் புணர்ச்சிக்கு முன் குறிப்பறிதலே சிறப்பாகக் கூறப்பட்டது. இதனால் ஊகிக்கக் கிடப்பதுயாதெனில் திருக்குறட் காலத்திற்குப்பின் திருக்கோவையாருட் கூறப்பட்ட துறைகள் விரிந்திருக்க வேண்டுமென்பதே. அல்லது நூலியற்றும் ஆசிரியரது மனப்பாங்கிற் கேற்றவாறு துறைகள் விரித்தும் சுருக்கியும் அமைக்கப்பட்டிருக்கலாம். தலைமகளின் உடன்பாட்டினை அவளது சொல்லாற்பெறவையாமல் கண்களில் வைத்துக் கூறப்பட வேண்டுமென்பதை ஆசிரியர் தொல்காப்பியர் ஒரு சூத்திரத்தால் கட்டளையிட்டிருக்கின்றார்.

"நாட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
காட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்."

ஆதல்பற்றி ஆசிரியர் திருவள்ளுவனாரும் கண்ணினால் உணர்த்துங் குறிப்பினையே மிகுத்துக் கூறியுள்ளார்.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில" என்றது காண்க.

அவ்வாறே திருச்சிற்றம்பலக் கோவையாருள்ளும் உட்கோள் என்றதுறை கண்களின் குறிப்பினையே கூறிற்று. அவ்வாறே தஞ்சைவாணன் கோவையுள்ளும் காண்க. ஆசிரியர் திருவள்ளுவர் 'குறிப்பறிதல்' என்னும் அதிகாரத்துள் முதற்கண் கூறிய குறட்பாவின் கருத்தே கோவையார் முதலிய நூலுள்ளும் காணப்படுகின்றது.

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"—திருக்குறள்

"பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிற மின்னும்
பணியும் புரைமங் குற்பெருந் தோளி படைக்கண்களே."
—திருக்கோவையார்.

"பெண்ணின் நிறைந்தவிப் பேதை தன்பார்வை பெருவினையேன்
எண்ணிற் சிறந்த விருந்துயர் நோய்தனக் கின்மருந்தாய்"
—தஞ்சைவாணன் கோவை.

16172



குறிப்பறிதலென்னுந் துறை கைக்கிளைப் பாற் படுமென்ற கருத்தால் களவிய லுரையாசிரியர் அதனைக் கூறிற்றிலரெனினும் அது இருவரது உள்ளக்குறிப்பின் ஒருமையை உணர்த்துந் துறையாகலானும் 'தமியர் காண' 'காமப்புணர்ச்சி' என்ற அகப்பொருள் இரண்டாவது சூத்திரச் சொற்றொடர்களின் குறிப்புப் பொருளால் அது பெறப்படுதலானும் அதைச் சிறிது விரித்துரைத்தாம்.

இனி, இருவயினொத்தல் என்பதற்குக் களவியல் உரையாசிரியர் தனி உதாரணச்செய்யுள் எடுத்துக்காட்டாது நயப்பு என்பதன் கண்ணேயே அதனைப் பெறவைத்தார். அத்துறையை யுணர்த்துவதாகச் சொல்லப்படும் திருக்கோவையார்ச் செய்யுளும் திருக்குறட் செய்யுளும் போகப்புதுமையை விதந்தோதுமுகத்தால் இருவயினொத்தற்குக் காரணம் குறிப்பாய்க்கிளந்தனவேயன்றி இருவயினொத் தலைநேராக விளக்கவில்லை. அவைகள் புணர்ச்சி மகிழ்தலின் பாற்படுமென்றே கொள்ளுதல் பொருத்தமானது.

"......பெரும்போகம் பின்னும் புதிதாய்
................................................. வளர்கின்றதே"
—திருக்கோவையார்.

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு"—திருக்குறள்.

இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் நயப்பு என்றதே நலம் புனைந்துரைத்தல் என்பதாகும். இருவருங் கூடியவிடத்துத் தலைவன் தன் நயப்பு உணர்த்தற்குரிய பாங்கன் முதலியோரில்லாமையாலும் தலைவிக்கு அதனை நேரே யுணர்த்துதல் அத்துணைச் சிறப்பிலதாகலானும் வண்டிற்கு அதனை யுணர்த்துவதாக ஆசிரியர் கூறினார். இதனைத் தொல்காப்பியனார் முன்னிலையாக்கல், சொல்வழிப்படுத்தல், நன்னயமுரைத்தல் எனப்பிரித்தோதினர். நேரே உரையாடாத வண்டு முதலியவற்றை விளித்து நயப்புணர்த்தப் படுவதால் முன்னிலையாக்கல் என்றார் தான் கூறுவதற்கு எதிருரையை விரும்பித்தன்னொடு பேசாத

அவற்றைப் பேசும்படியாக வேண்டுதலின் சொல்வழிப்படுத்தல் என்றார். பின்னர் தன்னயமுணர்த்துவதை நன்னயமுரைத்தலென்றார். ஆசிரியர் திருவள்ளுவனாரும் அனிச்சத்தையும் நெஞ்சையும் விளித்து நலம் புனைந்துரைத்தமை காண்க: நயப்புணர்த்து முறையைத் தன்மை நவில்வது, உவமையாகச் சிறப்பு நவில்வது என இருபகுதியின் வைத்து திருவள்ளுவனார் அமைத்துள்ளார். பொழிலகத்தே இயற்கையாகத் தம்மைச் சூழும் வண்டினைச் செயற்கை நயம்படக்கூறுஞ் சிறப்பு இத்துறைக்கண் காணப்படுகின்றது. தலைவியின் உறுப்புக்கள் இன்ன தன்மையன வென்பதை நேராகக்கூறுவதுபா நலம் சிறவாமையால் வண்டிற்கு உரைக்குஞ்சொல்லின் வைத்து அதனை மொழிந்தார். 'தலைவிகையினைச் செங்காந்தளெனவும் கண்ணினைக் கருங்குவளை யெனவும் வாயினைச் செங்குமுதமெனவும் கருதி வண்டுதடுமாறிக் குழல்மேலும் கோதைமேலுஞ் சுழல்வதாகக்' கூறப்படுமென்று களவியலுரையாசிரியர் அதனை விளக்கிப்போந்தனர். இந்நயப்புணர்த்துவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு தருமிக்குப் பொற்கிளியளிப்பதற்கு ஆலவாயண்ணல் அருளிச்செய்து கொடுத்ததாகச் சொல்லப்படும் திருப்பாட்டாகும். அது வருமாறு:

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே."

இதனுள் தும்பியென்று வண்டினை விளித்தது, முன்னிலையாக்கல்; 'கண்டது மொழிமோ' என்றது சொல்வழிப்படுத்தல்; 'கூந்தலினறியவு முளவோ' என்றது நன்னய முரைத்தல்; 'காமஞ் செப்பாது' என்றதால் இடம் அணித்தென்பது குறிப்பித்தவாறும். அதனால் மகிழ்ச்சி குறைவதற் கேதுவாகிய பிரிவினைத் தலைமகட்கு நினைவூட்டுதலால் 'நகை நனியுறாது அந்நிலையறிதல்' என்பதும் பெறப்பட்டது. நட்புக்காரணமாகப் பிரிவால் தான் வருந்துமென்பதும் நட்பினைப்போற்றவல்ல தன்னிலை



யையும் குறிப்பாலுணர்த்துவான் 'பயிலியது கெழீஇய நட்பின்' என்றார். ஈண்டு, 'மெலிவு விளக்குறுத்தல்', 'தன்னிலையுரைத்தல்' என்னுந் துறைகள் அடங்கும். 'தெளிவகப்படுத்த' லென்பது தேன் தேர்ந்து பல இடங்களிலுஞ் சென்று மீளும் வண்டினை விளித்தலாலும் நட்பினரைத் தம்பாற் சார்விக்கும் தமது இயல்பினை வண்டின் மேல்வைத்துக் 'காமஞ் செப்பாது' என்று கூறியதனாலும் பெறப்படும். ஆகவே

"முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்
நன்னய முரைத்தல் நகைநனி யுறாஅ
தந்நிலை யறிதன் மெலிவுவிளக் குறுத்தல்
தந்நிலை யுரைத்தல் தெளிவகப் படுத்தலென்
றின்னவை நிகழு மென்மனார் புலவர்"

என்ற தொல்காப்பியர் சூத்திரத்திற்கு நயமிக்க முழு எடுத்துக்காட்டாக இச்செய்யுள் அமைகின்றது. 'கொங்கு தேர் வாழ்க்கை' என்பதன்பொருள், தேனைப் பல பூக்களினின்றும் தெரிந்தெடுப்பதே தனக்கு வாழ்க்கைத் தொழிலாக வுடைய வண்டு என்பது. தேன் தேர்தலே தனக்குத் தொழிலாதலானும் எவ்வகைப்பூவும் தோன்றி மலர்தற்கு ஏதுவாகிய மலை வளமிக்க குறிஞ்சி நிலத்து வண்டாதலானும் பூக்கள் பலவற்றின் நறுமணத்தை உய்த்துணர்வது வண்டிற்கு இயல்பென்றே யென்பது குறிப்பிக்கப்பட்டது. அன்றியும் வண்டானது களவியல் உரையாசிரியர் கூறியவண்ணம், எல்லா நிலத்துஞ் சென்று எல்லாப்பூவும் ஊதுமாகலானும் அது பூக்களின் மணவேறுபாட்டை அறியவல்லது என்பது போதரும். இருவரும் நிற்கின்ற விடத்துத் தனது நயப்புணர்த்துதற்கு வாயிலாக எதிர்ப்பட்ட காரணத்தாலும் தனக்கு மகிழ்ச்சிபெரிதும் பயக்கும் இடத்துள்ள உயிர்ப்பொருள்கள் தமக்கு இனியன வாகலானும் தும்பியென்பதற்கு அடையாக 'அஞ்சிறை' யென்றார். மேலும் தன்னிடம் வாராத ஒன்றினைத் தம்பால் அழைத்து உரையாடுவார் இன்சொற் கூறுதல் மரபாகலானும் 'அஞ்சிறை' என்ற அடை சாலும்

தலைவியினது இயற்கைநலத்தைப் புனைந்துரைக்குந் தலைமகன் கூறும் உரையானது வெற்றெனத் தொடுத்த அணிமொழியன்றுமென்பதை விளக்குவான் வண்டினை நடுவுநிலைமையில் நின்று அதன் கருத்தை யுணர்த்துமாறு கேட்கப்பட்டது. 'மயிலியல்' என்றதனாலே இயற்கையாயமைந்த மென்மை, அழகு, சாயல் என்பன குறித்தவாறும். மயிலிற்கு இவை அமைந்தாலும் எயிற்றின் சிறப்பு அதன்கண் காணப்படாமையால் 'செறியெயிற்றரிவை' என்ற சொற்றொடர் அமைக்கப்பட்டது.

இச்செய்யுள் கற்புடைப் பெண்டிரது கூந்தற்கு இயற்கை மணமுண்டென்பதை விளக்கிப் பாண்டியனது ஐயந்தீர்த்தற் பொருட்டு யாக்கப்பட்டதாகலின் 'கூந்தலி னறியவுமுளவோ' என்றார். ஏனை ஆசிரியர் தலைவியினது வாயினையே பூவிற்கு உவமையாக எடுத்துக்கூறுவாராயினர். வாய் மலரைப்போன்ற தோற்றமுடையதாய்ச் செவ்விதழ்களோடு திகழ்தலின் அஃதெடுத்துக் கூறப்பட்டது. இறையனார் அகப்பொருள் உரையில் எடுத்துக்காட்டிய பாட்டின் கண்ணும் திருக்கோவையார்ச்செய்யுளின் கண்ணும் வாயினை ஆம்பலுக்கு உவமை கூறுங்கருத்து அமைந்து கிடக்கின்றது.

"வேறுமெனை நின்றிகன் மலைந்தார் விழிஞத்து விண்போ
யேறுந் திறங்கண்ட கோன்றென் பொதியி லிரும்பொழில்வாய்த்
தேறுந் தகைய வண்டே சொல்லு மெல்லியல் செந்துவர்வாய்
நாறுந் தகைமைய வேயணியாம்ப னறுமலரே"

—இறையனார் அகப்பொருளுரை.

"தேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ டங்கனி வாய்கமழு
மாம்பலம் போதுளவோ வளிகாணு மகன்பனையே"

திருக்கோவையார்.

'அணியாம்பல் நறுமலர்' என்றதனால் அழகிய வடிவமும் நறுமணமும் கூறப்பட்டன. ஆம்பலிற்றேன்போல, வாயின் மொழியானது இனிமை பயப்பது. ஆம்பலைப்பார்க்கிலும் வாயை மிக்க வாசனையுள்ளதாகக் கூறியதை யெடுத்து ஆராய்ச்சிசெய்து



உவமேயத்தை உவமானமாகக் கூறியதனை ஓர் அணியென்று பிற்காலத்தார் கூறுவதுபோற் கூறாது களவியல் உரையாசிரியர் அதற்கு வேறு காரணம் செவ்விதில் தெரிக்கின்றார். அதாவது, "உலகத்து இவை உவமை, இவை உவமிக்கப்படும் பொருளென்று நிலைபெற்றன உளவேயில்லை. உரைக்குங்கவியது குறிப்பினால் உவமையும் உவமிக்கப்படும் பொருளாம்" என்பதே. ஆம்பல் குறிஞ்சி நிலத்திற்கு உரியதா, மருதநிலத்திற் குரியதாவென்று ஆராய்ச்சிசெய்து மருதநிலத்திற்கே சிறக்குமெனினும் குறிஞ்சியிலும் சுனைக் குவளையும சுனையாம்பலும் உளவென்று கூறினார். அதற்குப் பிரமாணமாகப் பெருங்குறிஞ்சி என்னும் நூலை எடுத்தோதினர். அந்நூல் இக்காலத்திருப்பதாகத் தெரியவில்லை. அதன் பெயர்ப்பொருளால் அது குறிஞ்சி நிலக்கருப்பொருள் யாவும் விளக்கும் ஓர் விரிநூலாகத் தோன்றுகின்றது. உரையாசிரியர் எடுத்துக்கொண்ட உதாரணச் செய்யுளுள் பாண்டியனது பொதிய மலையிலுள்ள இரும்பொழில் வாய்நிலவுவதாகலின் பெருந்தன்மையுடையதாய் நம்பப்படத்தக்க வண்டென்பது கூறப்பட்டது. இதனை இறைச்சிப்பொருளடங்கிய அடையென்று கூறுப. பாண்டியன் பெருந்தன்மையுடையான் என்பதற்கு அவனது வீரம் புகழப்பட்டதேயெனினும் அவனது கருணையுங் கூறப்பட்டதாக உரையாசிரியர் மொழிவது நகைச்சுவையைத் தருவதாயிருக்கின்றது. கோவை நூலுட் கூறப்படும் களவித்தலைவனைப் பாட்டுடைத் தலைவனது நிலத்து வாழ்வதாகக் கூறுவதாற்போந்த இழுக்கியாது மில்லையென்பதற்கு உரையாசிரியர் காரணம் விளக்கியவிடத்து, பாண்டியனது குலத்துள் தேவர்களே பிறப்பார்கள் என்ற ஓர் ஐதிகக்கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார். அரசனைக் கடவுள்போலக் கருதும் பண்டைக்கொள்கை இதனாற் புலனாகின்றது.

பிற்காலத்து வந்த தஞ்சைவாணன் கோவையுள் நயப்புரைத்த ஈரிடத்தும் தலைவியின் கொங்கையையே புகழ்ந்துரைத்தார். இதனால் பிற்காலத்தார் போக்கிற்கும் முற்காலத்தார் முறைக்கும் வேறுபாடு காணப்படும்.

நலம்புனைந் துரைத்தலின்பின் பிரிவிற்கு நிமித்தமாகிய சொல்லும் பிரிவும் இயற்கைப் புணர்ச்சியென்னும் பகுதியுள் அடங்கிநிற்பன. அவை பின்வரும்.

---

# சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம்

(வித்துவான் - பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்.)

செந்தமிழ் மொழியின் வனப்பெலாம் ஒருங்கு திரண்டு சைவ நல்லொளி வீசி ஞானப் பொருள்வளம் முற்றி அருள் வளம் பழுத்து சிவமணங் கமழ்ந்து பத்தித்தனித்தேன் பெருக்கெடுத்தூற்றும் தெய்வத்திருவருட் காவியமாக இலங்குவது நந்தம் சேக்கிழார் பெருமான் இயற்றியளித்த திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணமாம். இத்தெய்வத் திருவருட் காவியமானது தில்லைத் திருச்சிற்றம்பல மென்னும் சிதாகாச பரவெளியினூடெழுந்த இறைவனது 'உலகெலாம்' என்னும் அருணாதவொலியின் அமுததாரை தோய்ந்தினிக்கும் அற்புதப் பொற்பாக்களால் ஆக்கப்பெற்றுப் பொலிவுறுவதாம். இதனைத் திருவருள் ஆணைவழிநின்று திருச்சிற்றம்பல மகா சந்நிதியாங் கிருந்து கேட்ட அநபாயனென்னும் வளவர்பெருமான் இஃதியற்றி யருளிய சேக்கிழார் பெருமானார்க்குத் தொண்டர்சீர் பரவுவார் என்னுஞ் சிறப்புப்பெயர் வழங்கி இம்மாபுராணத்தினைப் பதினொரு திருமுறைகளோ டொன்றென வைத்துப் பன்னிரண்டாந் திருமுறையாக்கி இதன் தெய்வப்பெற்றிமை இற்றெனக் காட்டி நிலைநிறுத்தினான்.

திவ்வியம் பழுத்த சைவ:சித்தாந்தத் தைவிக ஞானாற்புத மெய்கண்டமரபு தழைய வெழுந்தருளிய உமாபதி சிவாசாரியர் நம்பெருமானின் செந்தமிழியல் வளங்கொழிக்குஞ் செந்நாப் புலமையும் திருவருட் செல்வம் விஞ்சிய மருவரு செம்மையும் தம்முட்டுலங்க இலங்கும் அவரது 'மங்கல சின்மய மதுரத்தமிழ்ச் செம்படல்வாரி' வளங்கண்டு



'தேவரு மெழுதவொணா மறையைத் தமிழ்செய்து திருப்பதிகம் பாடும்
மூவரு மொருமுதலா யுலகத்து முளைத்த முதற்பொருள் தாமென்பார்'

என விதந்து இளக்குமாற்றான் அவர்தம் புண்ணிய நலத்தின்மிக்க பொருவரு நிலையை எண்ணி யிசைத்தனர்.

சொல்விற்பனம் விளையு மதுரக்களஞ்சியமென விளங்கிய நம் குமரகுருபர முனிவரர் இம்மாபுராணத்துச் செய்யுளொன்றிற்கு அனுபவப் பயனறியாது மயங்கிய அவ்வற்புதச் செய்தி நம்பெருமானின் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிய சிவானந்தானுபவ விளைவின் தெளிவை புலப்படுத்தி நிற்கின்றது. இச்சகலாகம பண்டி தெய்வச் சைவராகிய சேக்கிழார் மீதொரு பிள்ளைத்தமிழியற்றிப் பேறுபெற்ற நல்லறிஞராகிய மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் கருதித் தொகுத்த இவர்தம் மெய்ப்புகழ்க்கோ ரெல்லையின்றாதல் நந்தமிழுலகு நன்றறிந்ததொன்றாம். 'பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப்பாடிய கவிவலவா' என்னு மப்பிள்ளைத் தமிழ்த்தொடர் பன்முறையும் சுவைத்துச் சுவைத்து பாராட்டற்குரியது.

இங்ஙனம் மெய்யுணர்வெய்தித் தெய்வப்புலமை மிக்க நம் நாவலர் பெருமானது அருணலங்கனிந்து அமுதஞ்சொரியும் திட்ப நுட்பஞ்செறிந்த செஞ்சொற் கவிகளின் செம்மை நலம் அளத்தற்கரியதொன்றாம். சொற்பொருள் நுட்பதிட்பங்களானும், இன்னோசையானும் எழில்சிறந்து விளங்கும் நலம்படு செய்யுட்களின் தீஞ்சுவை பெரிதும் பொதிந்துகனிந்த நற்றமிழ்ப் பிண்டத்தினை ஆசிரியர் தெய்வப்புலமைத் தொல்காப்பியனார்

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்.

என இலக்கணவகையாற் பாகுபடுத்தெடுத்துத் தமிழியல் வளத்தின் சிறப்புமிக்க தோல் என்னும் வனப்பின்பாற் படுத்துக் காட்டுவர். இதனை 'மூவாமுதலா வுலகமொரு மூன்றுமேத்த' என்றற் றொடக்கத்துச் சிந்தாமணிச் செய்யுளுரைக்கண் ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பா நான்கென்றும், அவற்றை அறம்பொருளின்பத்தாற் கூறுக

வென்றுங்கூறிப் பின்பு அம்மை முதலிய எட்டும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணமென்று கூறுகின்றுழி "இழுமென் மொழியார் விழுமியது நுவலினும்" என்பதனால் மெல்லென்ற சொல்லான் அறம்பொருளின்பம் வீடென்னும் விழுமியபொருள் பயப்பப் பழயதோர் கதைமேற் கொச்சகத்தாற்கூறின் அது தோல் என்று கூறினமையின் இச்செய்யுள் அங்ஙனம் கூறிய தோலாமென்றுணர்க' என ஓராற்றான் எடுத்து விளக்கினர்.

நாநலங்கனிந்த இம்மெல்லோசையின்பம் யாண்டும் நிரம்பித் துளும்பு மாற்றானும் விழுமியது பயக்கும் பழங்கதை கிளத்தலானும் இத்தோல் என்னும் வனப்பு முழுதுந்தழீஇய ஒளி விட்டிலங்குவது நந்தம் பெரிய புராணமாமென்பது அப்புராணத்தினது எப்பகுதியானும் இனிது நாட்டப்படுவதாம். உலகியலறிவுந் திருவருட் பொலிவுங்கலந்து, பரந்து விரிந்த மனோ பாவனையின் நல்வளம் பழுத்தெழுந்த தேம்பொதி கிளவிகளின் இன்னோசை கெழுமி இன்பவெள்ளமென ஊற்றெடுத்தோடும் இவர்தம் பெருமிதவளம் பல நிறைந்த நடைச்சிறப்பு யார்க்கும் வாய்ப்பப் பெறாததொன்றாம். அந்நிலையில் நம்பெருமான் தனி முடிகவித்தரசாளும் சக்கரவர்த்தியெனத் துலங்குகின்றார். இவர் தமது மாபுராணம் நவரசத்துறை மிக்குடைய நற்றமிழ்ப் பேரியாற்றின் நலம்படு மமுதவெள்ளமென வயங்குகின்றது. சொற்சுவையோ தேனும்பாலுமுடன் கலந்திட்ட செழுங்கனித் தீஞ்சுவைத்திரளெனத் துலங்குகின்றது. பொருட்சிறப்போ அருளானந்தப் பெருங்கடலின் அலைவாயெழுந்த அமுதமயமாயிலங்குவது. இன்னோரன்ன நன்னலம் பெரிதும் துதைந்து மிளிரும் பெரிய புராணவருஞ் சிறப்புப் பாவினுமடங்கா நாவினுமடங்கா எனக்கூறன் மிகையாகாது.

புவியினுக் கணியா யான்ற பொருள்தந்து புலத்திற் றாகி
யவியகத் துறைகள் தாங்கி யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் பயின்று சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்.

எனவரும் கம்பநாடரது கவியிலக்கணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் நின்று நிலவுவது நந்தம் பெரியபுராணமே



யாம். செந்தமிழ்த் தெய்வத் திருமுறை யணியினிலங்கிச், சிவ ஞானமிக்க சிறப்பென்னும் செம்பொருள் பயந்து, நவில்தொறும் நவில்தொறும் நயம்பலகாட்டும் பொருட்பரப்பின்மிக்க செம்புலம் வாய்ந்து, திருத்தொண்டர்களது கருமஞான அருளொழுக்கங்களாம் அளவில துறைகளேய்ந்து, செந்தமிழ் நானிலத்தைத் திணைவளன் தழீஇய திணைப்பாகுபாடுகள் தோய்ந்து, முழுமணித்திரளென ஒள்ளொளித்தும்பும் சொன்னலத் தெளிவது துலங்க, இறைவனதருட் பெருவெள்ளத் தண்ணளி விளங்க, ஏழிசை யினியல் வளங்கொழிக்குங் குழலினும் யாழினும் மீக்கூர்ந்து இன்பமளிக்கவல்ல சொற்சுவை பழுத்த செய்யுளோசை யொழுக்கம் இழுமெனவயங்க எத்திசையும்புகழ் மணக்க இருந்தலவும் நம்பெரிய புராணத்திற் சிறந்த பிறிதோர் எடுத்துக் காட்டதற்கின்றாதல் கண்டுகொள்க.

இவ்வருட்காவிய முழுவதூஉம் பசுபதிப்பெயரிய தனி முதற் கடவுளாம் பரசிவ வழிபாட்டிற் றலைநின்று நாற்பாத வாயிலான் வீடுபேறெய்திய விழுத்தவமிக்க உண்மை நாயன்மார்களது கருமஞான அருளொழுக்கங்களே சரிதவாயிலான் எடுத்துரைக்கப்படுதலின், அம்மெய் வரலாற்றின் புண்ணியப்பொருட்டுறைகளின்கண்ணெல்லாம் தெய்வமணந் தங்கிநிற்றல் இயல்பேயென்பது யார்க்குமினிது விளங்கிக் கிடப்பதொன்றாமெனினும் மற்றதனின் மாறுபட்ட முல்லைக்குறிச்சி மருதம் நெய்தல் என்னும் நானிலத்தைத் திணைவளன் தழுவி நடைபெறும் நாடு நகரச்சிறப்புக்களினும், யாறு மலை கானங்களின் எழில்களினும், அருணோதயத்தின் அழகொளிபரப்பினும், செக்கர்வான் சிறப்பின் செஞ்சுடரணியினும், தண் கதிர்மதியத்தெண்ணில் போழகினும், அகனைந்திணையின் இன்பச்சுவை மலிந்த காமப் பகுதியினும் தெய்வமணங்கமழ்ந்து நிற்கச் செய்யுளியற்றிய செம்புல மாட்சிப்பெரிதும் வியந்து பாராட்டற்குரியதாதலின் அவ்வியல்பு பற்றிவரும் நம் அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமான் திருவாக்குக்களுள் தாலி புலாக நயம்பற்றி ஒருசில எடுத்துக்காட்டுதலே இக்கட்டுரையின் கருத்தாமென்பது.

சோழவளநாட்டின் அணிகலன் எனச் சிறந்து அழகொளி பரப்பும் காவிரியாற்றின் மாபெருஞ் சிறப்பினை எடுத்திசைக்கும் பாக்களுள்

வண்ணநீள்வரை தரவந்த மேன்மையால்
எண்ணில் பேரறங்களும் வளர்க்கு மீகையால்
அண்ணல் பாகத்தை யாளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையி னொழுக்கம் போன்றது.

என்றதோரழகிய பாடல் நம் முள்ளத்தினையுருக்கி நிற்கின்றது. மலைக்கட்டோன்றுதலானும், தனது நீர்வளத்தால் விளையுளாக்கி அறச் செயலனைத்தினையும் மளித்துதவலானும் (குடகமலையிடத்தே தலையினையுடைய) காவிரியாறனது பர்வதராஜபுத்திரியாக வவதாரஞ்செய்து யாவரானும் அண்ணற்கரிய கண்ணுதற் கடவுளது இடப்பாகத்தைத் தம்மாட்சியாகவுடைய காமக்கண்ணியாரது கருணைப்பிரவாகத்தினை நிகர்த்து விளங்காநின்றதென மலையரையன் பொற்பாவையொடுங் காவிரியாற்றினை உவமை காட்டியவாற்றான் அவ்வம்மையார் என்றும் பான்மொழக்கன்னியாம் இளமைத் திருக்கோலந் தாங்கி விளங்குதலொப்ப இவ்வியாறும் என்றுந் தனது இளமைச் செவ்விகுன்றாத புனிதமுடைத்தாதலும் அம்மையாரது பெருங்கருணைக் கிலக்கானோர் சத்திநிபாதமுற்றுப் பேரின்ப வீடெய்திப் பெரும்போகந் துய்த்தலொப்ப இவ்வியாற்றினது பெருந்துறையின் மூழ்கிய நன்மக்களும், புனிதமுற்று அம்மைப்பெரும்பேறெய்துதல் திண்ணமாதலும் கருணைசொரூபியாக விளங்கும் அம்மையாரது திருவருட் பெருக்கு என்றுங் குன்றாதுலகினைப் பாதுகாத்தளித்தலொப்ப இவ்வியாற்று நீரும் என்றும் தந்நீர்மைகுன்றாது நம் நாட்டினைக் காத்தளிக்க வல்லதாதலும், அம்மையார் யாவரானும் அண்ணற்கரிய கண்ணுதலாகந்தோய்ந்து நின்றதொப்ப இவ்வியாறும் யாவரானும் அளத்தற்கரிய பெருங்கடலாகந் தோய்ந்து நிற்பதாதலும், உய்த்துணரவைத்த நம் சேக்கிழார் பெருமான் திருவுள்ளம் பெரிதும் போற்றற் பாலது.

(தொடரும்)



# அகம் புறம்

[க. ப. சந்தோஷம் B.A., L.T,]

(௩௪௩-ம் பக்கத் தொடர்ச்சி)

மருதத்திணையில் ஊடல் நிகழ்வதும் அகத்திற்கும் புறத்திற்குமுள்ள ஒற்றுமைபற்றியே. செந்நெல் விளையும் மருதநிலத்தில் உடையுணவு குறைவின்றி நண்பர் சுற்றத்தார் சூழ விருப்பத் தலைவனுந் தலைவியும் வாழ்வுழி அவர்க்குட் பிணக்கமுண்டாவதியல்பே. குறிஞ்சியி லவர்க்குண்டாகு மிடையூறு மிகுதி; மருதத்தி லவர்க்கிருக்குந் துணைகள் பல. ஆதலின், ஒன்றிற்கூடலும் மற்றொன்றில் ஊடலும் நேர்கின்றன. தாமரை மலரும் பொய்கைகளும், மலைகள் தோறும் கிணறுகளுள்ள பேரூரும், எருமையை யோட்டும் உழவரோதை முழங்கும் நெடுநல் வயல்களையுமுடைய மருத நிலம் கற்புப் பகுதிக்கு மிகவும் ஏற்புடைய தாதல் காண்க. முல்லை மருதம் நெய்தல் மூன்றும் கற்புப் பகுதியைச் சார்ந்தவை. இந்நிலங்களுக்கும் இவற்றில் நிகழும் உரிப்பொருள்களுக்குமுள்ள பெயர்ப்பொருத்தம் தெளிவாய்த் தெரியவில்லை. ஆராய்ச்சியிலுளஞ் செலுத்துவோரிதை முடித்துக் கொள்வாராக.

செம்மையான உடலமைப்பும் பார்ப்போருளத்தை மகிழ்விக்கும் அழகிய நகைமுகமுமுடைய ஒரு மகனைக் கண்டபோது அவனைத் தீயவனென்று எவருந் துணியார்; அவனினியனாயிருப்பானென்று நினைப்பதே மக்களுட் பெரும்பாலோர்க் கியல்பு. அவ்வழகிய மகனிடம் தவறுகளொன்றிரண்டு வெளிப்படுமேனும் அவற்றைப் பெரிதாக்கிப் பாராட்டாது மறைத்துங் குறைத்தும் புகல்வது நாடோறும் நாம் காண்பதொன்றாகும். இவ்வாறே அருவருக்கத்தக்க வெளித்தோற்றமுடைய ஒருவன் நன்மகனென்று பலர் கருதார். புறத்திற்கும் அகத்திற்கும் ஓர் இயைபு உண்டென்னும் நினைவு ஏறக்குறைய எல்லோரிடத்தும் உளது. நாமறியாமலே அத்தகைய எண்ணம் நம்மிற் குடிகொண்டிருக்கிறதென்பதை மறுக்கொணாது. எழில் வாய்ந்த

மகன் தீச்செயல் புரிவானாயின் அதிலொரு முரண்பாடு தோன்றுகின்றமையின், “என்னே, இம்மகன் தொழில்! முகத்தைக் காணின் நன்மைக்கோருறைவிட மெனத் திகழ்கின்றான்; செய்கையோ அதைப் பொய்யாக்குகின்றது” என்று சொற்பிறப் பதைப் பன்முறை கேட்கிறோம். புறத்தெழிலும் அகத்தீமையும் ஒன்றியிருத்தல் இயற்கையாய் நாமெதிர்பார்க்கும் நிகழ்ச்சியாயின் அதைப்பற்றி நாம் இரங்குவ தெற்றிற்கு? காட்சிக்கினியன் உளத்திலு மினியனா யிருப்பது கண்டு நாம் மகிழ்வதேன்? வெறுப்பைத் தரும் வெளி வடிவமுள்ளவன் தனியினியனா யிருத்த லறிந்து வியப்படைவதேன்? அகன்ற ஞாலத்தின்கண் பொருள் பறவை விலங்குகளிலும் மக்களிலும் பார்வைக்குந் தன்மைக்கும் அமைந்த ஒற்றுமையினும் வேற்றுமை பெரிதாயினும், உள்ளும் வெளியும் ஒத்திருக்க வேண்டும் என்ற ஆவல் ஒருவரையும் விட்டதில்லை. தொல்காப்பியர் இவ்வடிவினர் என்று ஒருவருமறிந்து சொல்வதற்கில்லையாயினுந் தொல்காப்பியங் கற்பாருளத்திலெலாமவர் வடிவம் ஒருவாறு பதிக்கப் பட்டிருக்குமென்பது ஒரு தலை. அவ்வடிவம் அவரது நூலில் வெளிப்பட்ட உளவியற்கையைக் கொண்டமைக்கப்பட்டதாகும். அவரவர் கல்வி கேள்வி யுணர்ச்சிக்கேற்ப இவ்வடிவம் வேறுபடுமாயினும சிலவகையிலது ஒத்திருக்கும். இங்ஙனம் உளத்தன்மை கொண்டு வெளித்தோற்றம் வகுக்கப்படுதல் இறும்பூதன்று. அகத்தின் பான்மை புறத்தில் விளங்க வேண்டுமென்று மக்களனைவரும் நச்சுகின்றனர். இதை ஈராயிரமாண்டுகட்கு முன்னரே எளிதி லறிந்த சான்றோராகிய தண்டமிழ்ப் புலவர் மக்களது இயற்கை நசை தணிப்பான், உணர்தல் பிரிதல் முதலிய உணர்ச்சிகளை அவற்றிற்குச் சார்பாயுள்ள இடம் பொழுதுடன் அமைத்தனரே யன்றி, அவ்வொழுக்கங்கள் குறித்த நிலத்திலும் நேரத்திலும் நிகழுமென்றன்று.

நெய்தல்

(கதப்பிள்ளையார் பாடியது)

தூங்கலோலை யோங்குமடற் பெண்ணை
மாவரை புதைத்த மணன்மலி மூன்றில்



வரையாத் தாரம் வருவிருந் தயருந்
தண்குடி வாழ்ந ரங்குடிச் சீறூ
ரினிதுமன் றம்ம தானே பனிபடு
பல்சுர முழந்த நல்கூர் பரிய
முழுங்குதிரைப் புதுமண லழுந்தக் கொட்கும்
வாலுளைப் பொலிந்த புரவித்
தேரோர் நம்மொடு நகாஅ வூங்கே,

இப்பாட்டில் ‘தலைவர் நம்மொடு நகுவதன்முன் சீறூர் இனிவதாயிருந்தது” எனக்கூறியிருக்கிறது. இச்சிற்றூர் முன்னிருந்த இனிய நிலையிலேயே இன்னுமுளதாயினும் தலைவரருகி லின்மையால் வருத்தமுடையதாய்த் தலைவிக்குத் தோன்றுகின்றது. இதனால் நாம் மேற்கூறியவை நன்கு விளங்கும். குளிர்நாடுகளில் இளவேனிற்பொழுது தொடங்கும்நாள் மிக ஆவலாய் எதிர்நோக்கப்படும்; காதலர் கூடுவதற்கு அதுவே ஏற்றகாலமாகும். “என் காதலியே,:கட்டழகியே, நீ எழுந்துவா. மாரிகாலஞ்சென்றது, மழைபெய்யும் நாளகன்றது, செடிகளிலெங்கும் மலர்கள் விரிகின்றன. குருவிகள் வெளிவந்து ஒன்றையொன்று கூப்பிட்டுக் குலவுங்காலம் வந்தது; காட்டுப்புறாக்கள் கூவுமோசை நாடெங்குங் கேட்கிறது. அத்திமரங் காய் காய்க்க, கொடிமுந்திரி பூப்பூத்து நறுமணம் வீசுகின்றது. காதலியே, கட்டழகியே, நீ எழுந்துவா.” இது மிகத்தொன்னாளில் பாடப்பெற்ற பலத்தின் (Palestine) நாட்டுப்பாடல்; பொருத்தமுண்மையால் இது இனிமையை ஊட்டுகின்றது. அறிஞர் இங்கொரு கடாவெழுப்பக்கூடும். அஃதென்னவெனின், முன்னோர் இயற்றிய நூல்களில் முதுவேனிற்பொழுது பிரிதற்கேற்ற காலமென்று நாட்டப்பட்டிருக்கத் தமிழ்நாட்டில் மணம் மிகுதியும் நிகழ்வது அக்காலத்திலேயேயன்றோ? என்பதே. உண்மைதான். ஆனால், முதுவேனிலைப் பிரிதற்கும் கூதிரைக் கூடுதற்கும் பொருத்தி யமைத்ததெல்லாங் களவைக் கருத்திற்கொண்டே. அக்களவு இப்போது நிகழ்வதில்லையாகலின் இங்கு பொருந்தாமை ஒன்று மின்மைகாண்க. கற்பொழுக்கமே பெரிதும் நடைபெறத்தொடங்கிய ஞான்று முதுவேனிற் காலம் மணம்புரி

வதற்கேற்ற பொழுதாக அமைக்கப் பெற்றிருக்கவேண்டும். இதிலும் மிகுந்த பொருத்தமுண்டு. செந்தளிராசு தந்துளிர் விடுவதும், பனை ஈந்து பாளை விடுவதும், மல்லிகை முல்லை மலர்வதும், மா, பலா பழுப்பதும், நெல்லறுத்துக் களஞ்சியஞ்சேர்ப்பதும் முதுவேனிலிலேயாம். மணத்திற்கு இன்றியமையாதனவாகிய உணவுப்பொருட்களும் மணப்பந்தலில் தொங்கவைக்கும் பனை, ஈந்து முதலியவற்றின் குலைகளும் யாவருஞ்சூடிக் களிப்படையும் நறுமலர்களும் அரசாணிக்காலிற்கு வேண்டியனவும் எளிதிற் கிடைக்குங்காலத்தையே கற்புப்பகுதிக்கேற்ற கூடலுக்கு நாளாகக்கொண்டனர். தமிழாண்டு முதுவேனிலிற் பிறப்பது இதுபற்றியேபோலும்.

இனி, அகம் என்பது ‘உள்’ என்று பொருள் படுகின்றமையானும், ‘உள்’ என்பது ‘உண்மை’ என்பதன் முதனிலையாதலானும் உண்மை, வாய்மை, மெய்மை ஆகிய ஒருபொருட் சொற்களைச் சிறிது ஆராய்வாம். ‘உள்’ என்பது நெஞ்சைக்குறிக்கும்; அது ‘அம்’ ஈறுபெற்று, உளம், உள்ளம் எனநிற்கும். உள்ளத்தில் நடப்பதன்கூறு உண்மை எனப்படும். உள்ளத்தில் நிகழ்வது உணர்வு, நினைவு, துணிவு (Feeling, Thinking, Willing) என முப்பாற்படும். உள்ளிருக்குங் கொட்டைக்கிசைய அதை மூடியிருக்கும்பழம் அமைப்புப்பெறுமாறு அகத்திலெழும் உணர்வு நினைவுகளுக் கிசையச் சொல்லுஞ் செயலும் அமைதி பெறும். பழத்தையறுத்துக் கொட்டையை வெளிப்படுத்துமாறு செய்கையைப் பகுத்துப்பார்த்து உண்மையறியப்படும். ஒருவன் யாது நோக்கத்தைக்கொண்டு ஒன்றைச் செய்தானென்று புலப்படாவிடின் அவனது செயலின் தன்மை இன்னதெனத் துணியவிடமில்லை. ஆதலின், “அதன் உளவு யாது?” என்ற கேள்வி பிறக்கிறது. உளவு—உள்ளிருப்பது, உண்மை; உளவன்—உள்ளதையறிந்து சொல்வோன், ஒற்றன்.

(தொடரும்.)

---



# முடங்கல்

[திருச்சி பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

(சாரு-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, கோவலற்குக் கோசிகன் கூறியனவாக முன் எழுதிய செய்திகளில் மாதவி முன்பொருமுறை கோவலற்குத்திருமுகம் போக்கினளென்பதும் ஒன்றாகும். ஆண்டுத் திருமுக வாசகம் இம்முறையான் அமைக்கப் பெற்றிலதாயினும், அதனானும் சில செய்திகள் உணர்ந்து கொள்ளப்படுதல் நோக்கி அதன் வரலாற்றை இங்கே குறித்திடுகின்றாம்.

கோவலன் மாதவியுடன் கூடி இன்பந் துய்த்து வருகின்ற காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா நடைபெற்றது. அவ்விழாவின் முடிவில் உவாநாளிலே நகர மாந்தராகிய ஆடவரும் பெண்டிரும் கடலாடுதற்குச் சென்றனர். கோவலனும் மாதவியும் அங்ஙனமே ஊர்திகளிற் சென்று கடற்கரையை யெய்தித் தாழைவேலியின் உள்ளிடத்தே புன்னை நீழலினுள்ள புதுமணற் பரப்பில் சித்திரத்திரையைச் சுற்றிலும் வளைத்து மேல் விதானிக்கப் பெற்றதந்தக் கட்டிலில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது மாதவியானவள் தோழியாகிய வசந்தமாலையின் கையிலிருந்த யாழை வாங்கிப் பண்ணல், பரிவட்டணை முதலிய எண்வகையால் இசையை யெழுப்பி, மெல்லிய விரல்கள் நரம்பின் மேற்படர வார்தல் முதலிய எண்வகைக் கரணத்தானும் பொருந்திய இசைக் கூறுகளைத் தன் செவியான் ஓர்த்துப் ‘பணியாது?’ எனக் கூறிக் கோவலன் கையில் யாழை நீட்டினள். அவனும் அதனை வாங்கிக் காவிரியை நோக்கிய ஆற்றுவரியும், கானல் வரியும் முதலிய இசைப்பாட்டுக்களை மாதவியின் மனமகிழப் பாடுவானாயினன். அங்ஙனம் பாடியவற்றைக்கேட்ட மாதவியானவள் அப்பாடல்கள் அகப்பொருட் சுவையுடன் கூடியிருந்தமையின் கோவலன் வேறு மகளிர்பால் மனம் வைத்துளானெனத் திரிய வுணர்ந்து, யாழினைத் தான் வாங்கித் தான் வேறு குறிப்பிலளாயினும் வேறு குறிப்புடையாள் போன்று

அகப்பொருட்சுவை தழுவிய வரிப்பாட்டுக்களைப் பாடினள். அங்ஙனம் பாடியது கேட்ட கோவலன் யாழிசைமேல் வைத்து ஊழ்வினை வந்துருத்த தாகலின், 'யான் கானல்வரி பாடத் தான் அப்படிப் பாடாது என்னை யொழிய வேறொன்றின்மேல் மனம் வைத்து மாய முடையளாகிப் பாடினள்' என்றெண்ணி அவளைத் தழுவிய கை நெகிழ்ந்தனனாய் விட்டுப் பிரிந்து மாலைப் பொழுதிலே ஏவலாளர் சூழ்தரப் போயினன். மாதவியும் கையற்ற நெஞ்சினளாய் வண்டியிலேறிச் சென்று தன் மனையை அடைந்தாள். அடைந்தவள் வேனிற் காலமாகலின் அதற்குரிய வானுற உயர்ந்த மேனிலையில் நிலா முற்றத்தே சென்று யாழைக் கையிலெடுத்துக் கண்டத்தாற்பாடி, அது மயங்கி, யாழாற் பாடலுற்று அதுவும் மயங்கிப்பின், காமராச னாணையாலே உலகமெல்லாம் தொழுதிறைஞ்சப்படும் அவனது திருமுகத்தைக் கோவலற்கு விடுப்பேமென்னும் எண்ணமுடைய ளாயினள். திருமுகமெழுத அவள் கொண்ட கருவிகள் : சண்பகம் மாதவி பச்சிலை பித்திகை மல்லிகை செங்கழுநீர் என்பவற்றால் நெருங்கத் தொடுத்த மாலையின் இடையே கட்டிய முதிர்ந்த தாழம் பூவின் வெள்ளிய தோடும், அதற்கு அயலதாகிய பித்திகையின் முகையும், செம்பஞ்சிக் குழம்பும் ஆகும். பித்திகைட்ரும்பை எழுதுகோலாகக் கொண்டு செம்பஞ்சிக் குழம்பிலே தோய்த்துத் தாழையின் வெண்டோட்டில் எழுதினளென்க. எழுதின வாசகம் :

"மன்னுயி ரெல்லா மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்று இஃது அறிந்தீமின்"

என்பது. இதனைத் தன் முற்றாத மழலைச் சொல்லால் பலகாற் பேசிப் பேசி யெழுதி, வசந்தமாலையைக்கூவி, 'இம் மாலையிலெழு



திய பொருளையெல்லாம் கோவலற் கேற்பச் சொல்லி அவனை இப்பொழுதே இங்கே கொண்டுவருவாயாக' என விடுத்தாள். அவ்வோலையைக் கொண்டு சென்று அவளும் கோவலற்குக் கொடுப்ப, அவன் 'மாதவி நாடக மகளாகலின் பலவாறாக நடிப்பது அவட்கு இயல்பன்றோ?' என்று கூறி மறுப்ப, அவள் இரக்க முற்றுச் சென்று மாதவிக்கு அதனை யுரைத்தனள். மாதவியும், மாலை வாராராயினும் காலை காண்குவம்' என மலரமளிமிசைத் துயிலின்றி யிருந்தனள். திருமுகவாசகத்திலுள்ள நயங்களை ஓர்ந்துணர்க. வாசகமே யன்றி, அதனை வரைந்த தாழை வெண்டோட்டு முடங்கலும், பித்திகைக் கொழு முகையும், அலத்தகக் குழம்பும், மலர்மாலிகையும் காதலுணர்ச்சியைப் புலப்படுப்பன வாதல் காண்க. இனி இப்பொழுதையிற்போல எழுதுங் காகிதம் அக்காலத் திருந்திலதேனும், வெண்ணிற இதழில் செந்நிறக் குழம்பு தோய்த்துக் கூரிய முகையால் எழுதப்பெற்ற தென்னுஞ் செய்தியானது இப்பொழுது வளர்ச்சியடைந்திருக்கும் காகித எழுத்துமுறை இரண்டாயிர ஆண்டுகளின் முன்பே கருக்கொண்டிருந்த தென்பதைக் காட்டுகின்றது.

இனித் திருமுகமெழுதுவது குறித்த பிறிதொரு செய்தி சீவகசிந்தாமணியிற் காணப்படுகின்றது. அதனையும் ஈண்டுத் தருகின்றோம்.

தன்னை யாழில் வெல்வோரையே மணஞ் செய்துகொள்வ தென்றிருக்கிற காந்தருவதத்தை யென்னும் விஞ்சையர் நங்கையை யாழில் வென்று தன் கல்வியைத் தோற்றுவிக்கக் கருதிய சீவகன் அச்செய்தியைத் தன்றோழனாகிய புத்திசேனனால் கந்துக் கடனுக்கு அறிவிக்க, அதனைக் கேட்டுணர்ந்த கந்துக்கடன் சீவகன் அறுபத்து நான்கு கலைகளையும் உணர்ந்தவனாதலை புத்திசேனனுக்குக் கூறி, அன்னனாயினும் கட்டியங்காரனது பகைமை அவனுக்குளது எனக் கூறும் அப்பொழுது கோயிலி லிருந்த நாகமாலை யென்பவளால் அறுப்பப்பட்ட தூதியொருத்தி வந்து தன் கூந்தலாகிய உறையிற் பொதிந்த நீலமணி போலும் குவளையை யெடுத்து நீட்டினள். அதனை அவன் மயிரில் முடித்த

மலரென்றிகழாது நாகமாலையின் குறிப்பால் ஒரு காரியம் உள தென்று கருதி அதனை யேற்று அதன் அகவிதழி னுள்ளிருந்த தொரு ஓலையை யெடுத்து வாசிக்கின்றான். அதனைக்கூறும்பாட்டு

நல்லவ ளுக்க நாய்கன் றேர்ந்துபூங் குவளைப்போதின்
அல்லியுட் கிடந்த வோலை தாளது சலாகை யாதல்
சொல்லுமென் றுய்ந்துகொண்டு துகிலிகைக் கணக்கு நோக்கி
வல்லிதிற் சலாகை சுற்றி யோலையை வாசிக்கின்றான்"

என்பது. மறை பொருளாகத் திருமுகம் எழுத இம்முறை கையாளப்பட்டிருக்கிறது. ஒருசலாகையில் ஓலையை வரிசையாக நீளச்சுற்றி அதன்மீது வாசகத்தை வரைந்து பின் பிரித்தெடுத்துச் சுருள்செய்து அநுப்புவது. இதனை நீட்டோலையாக வாசிக்கலுறின் எழுத்துக்கள் வெவ்வேறிடங்களிற் பிரிந்து இடக்குமாகலின் வாசக உருவினைக் காணுதல் அமையாதாகும். ஆக, எழுதப்பட்டார்க்கு அச்சலாகை (கம்பி)யையோ, அதனை யொத்த பிறிதொன்றையோ உடன் அநுப்பியாதல், அதன் அளவினையும் வடிவினையும் தெரிவித்தாதல் அம்முறையானே அதனை வாசிக்குமாறு குறிப்பிடுதல் வேண்டும். நாகமாலை விடுத்த ஓலையோ மிகவும் வியப்பினை விளைப்பதொன்று. அவள் தான் எழுதிய ஓலையைக் குவளை மலரினுள்ளே வைத்துக் கொடுக்கத் தூதியானவள் அதனைக் கூந்தலினுள்ளே பொதிந்து வைத்துக் கொணர்ந்தளித்தாள். இஃது இடையே எவ்வகையானும் எத்துணையும் வெளிப்படாது போற்றுதற்குச் செய்த தொரு சூழ்ச்சித் திறனாகும். குவளை மலரோ காளுடன் கூடியதாயிருந்தது. அத்தாள்தான் ஓலையைத் துகிலிகைக் கணக்குப்படி சுற்றி வாசித்தற்கமைந்த சலாகையாகக் காணப்பட்டது. அம்முறையானே அவனும் அதனை வாசித்துணர்ந்தான். நாமும் இவ்வளவில் இதனை நிறுத்துதும்.

(தொடரும்)

---



# நம்பியாண்டார் நம்பிகளும்
## இராஜஇராஜ சோழனும்

[வேலூர் C. S. இராஜாப்பிள்ளை]

(௱௯௪-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிசூடிய பன்னிரண்டாம் ஆண்டுமுதல் இம் மும்முடிச் சோழன் இப்பொழுது மைசூர் ஜில்லாவின் கீழ்ப்பாகமும் அவ்விடத்தைச் சூழ்ந்த சில நாடுகளையும் உடையதாய் காவிரிக் கரையிலுள்ள தழைக்காடென்னு மிடத்தைத் தலை நகரமாகக் கொண்டு அந்நாள் கங்கபாடி யெனப் பெயர்பெற்ற நாட்டினை வென்று, அத் தழைக்காட்டிற்கு இராஜஇராஜபுரம் எனப் பெயரிட்டு மீண்டு தன்னுடு சேர்ந்தான். இது அவ்வூர்ச் சாசனங்களில் தழைக்காடாகிய இராஜ இராஜபுரம் எனக் குறித்தலால் உணரக்கிடக்கின்றது. இக்காலத்து அவ்வரசனுக்கு உதவியாயிருந்து கடும்போர் புரிந்த சேனாதிபதி அப்பிரமேயன் என்பான்.

இப்பொழுது ' கோதாவரி, கிருஷ்ண ஜில்லாக்களென்று அழைக்கப்படுகிற வேங்கைமண்டலம் சில உட்கலகங்களினால் அரசரின்றி அலைவுற்றமையின் அச்சமயம் இராஜ இராஜன் தன் மகன் இராஜேந்திரனிடம் ஒருபெருஞ் சேனையை ஒப்புவித்து, அந் நாட்டினை வென்றுவருகவெனக் கட்டளையிட, அவ்வாறே அவனுஞ்சென்று அந் நாட்டினைவென்று, பின் சாளுக்கிய வம்சத்து அரசனான விமலாதித்தனையும் பிடித்துக்கொண்டு தன் தலைநகரமாய தஞ்சைநகர்க்குத் திரும்பினான். இராஜேந்திரனாற் கொண்டுவரப்பட்ட விமலாதித்தனிடம் இராஜ இராஜன் அன்பு பாராட்டித் தன்மகள் குந்தவையை மணம் புரிவித்து 23 ஆண்டுகள் தஞ்சை நகரத்தில் இருத்திப் பின் அவனை அச்சாளுக்கிய தேசத்திற்கு அரசனாக்கி அனுப்பினான்.

பட்டத்திற்குவந்த பதினாறுமாண்டு இவ் வேங்கைநாட்டுக்கு வடக்கேயுள்ள கலிங்கதேசத்தையும், பல்லவ அரசர் வகுப்பின

ணுகிய ஐயப்பநுளம்ப னென்பவனால் ஆளப்பெற்ற கங்கபாடியைச் சேர்ந்த நுளம்பபாடியையும் வென்று, குடகு நாட்டின் மேற் படையெடுத்துச் செல்ல, அப்பொழுது அந் நாட்டுத் தண்டத் தலைவனாகிய பஞ்சவமாராயன் என்பான், பனசோகே என்னுமிடத்திற் கடும்போர் புரிந்தமையின், அவனிடம் மகிழ்ச்சி கொண்டு அவனுக்கு "க்ஷத்திரிய சிகாமணி கொங்காள்வான்" எனும் பட்டப்பெயரும் "மாலவ்வி" எனும் ஊரும் அளித்து, வேங்கைமண்டலம், கங்கமண்டலம் இவ்விரண்டிற்குந் தண்டநாயகனாகச் செய்து, மலைநாட்டிலுள்ள கொல்லத்தையும் தன் வசப்படுத்தினான்.

16-ம் ஆண்டு முதல் 20-ம் ஆண்டிற்குள் இலங்கையை வென்று, மேல்நாட்டுச் சாளுக்கிய அரசனாகிய சத்தியாசிரயன் மீது படையெடுத்து அவனை வென்று அந்நாட்டையுந் தன்னுடாக்கினான். ஆக சென்னை ராஜதானியின் முக்காற் பாகமும் இலங்கையும் பட்டமெய்திய இருபதாமாண்டில் இவ்வரசன் வழிப்பட்டன.

இவ்வாறு நாற்றிசையுஞ் சென்று பல நாடுகளை வென்று திருவாரூரைத் தன் உறைவிடமாகக் கொண்டு, சிலகாலந் தஞ்சையிலும், சிலகாலம் ஆரூரிலும் இருந்து ஆட்சிபுரிவது வழக்கமாயிற்று. இவ்வரசனுக்குத் தேவிமார் ஐவரும், ஒரு புதல்வனும், மாதேவடிகள், குந்தவை என்னும் இரண்டு பெண்களும் இருந்தனர். தேவிமார் ஐவருள் ஒருவராகிய திரைலோக்கிய மாதேவியார் என்பவராற் கட்டப்பட்ட ஆலயங்கள் திருவையாற்றில் உத்தரகைலாச மென்று வழங்குந் திருக்கோயிலும், திரைலோக்கிய சுந்தரமும் என்பன.

பொதுவகையான் எல்லாச் சோழ பூபதிகளும் தமிழையும் சைவத்தையும் வளர்த்துத் திரு நடராஜப் பெருமானுக்கு உண்மைத் தொண்டர்களாய், வாழ்ந்த உத்தமர்களென்பது புகழ்ச் சோழர் செங்கணார் இடங்கழியாராதிய பெரியோர் சரித்திரங்களால் உணரக்கிடக்கின்றது. மூவர் திருமுறைகளும் சோழர் மெய்க்கீர்த்திகளும் இதனை வலியுறுத்தும். அவர்களுள்ளும்,



இவ்விராஜ இராஜனும், தேவிமார்களும், புதல்வன் இராஜேந்திரனும் மிகுந்த சைவப்பற்றுடையவர்களாய் இருந்தனரென்பது இன்றும் கண்டோர் வியக்குமாறு இவ்வரசன் கட்டிய "இராஜராஜேஸ்வரம்" என்னும் ஆலயத் திருப்பணியால் நன்கறியலாகும். அன்றியும் இவ்வரசன் காலத்தவர்களாகிய கண்டராதித்த தேவரும் கருவூர்த் தேவரும் பாடிய திருவிசைப் பாக்களிற் சில பாடல்களும் இதனை நன்கு புலப்படுத்தும்.

இந்த இராஜராஜேஸ்வரத்திற்கு இவனும், இவன் உறவினரும் மிகுந்த பூமியும், பொன்னும், மணிகளும் அளித்திருக்கின்றார்கள். இவனைப்பற்றிய சாசனங்கள் இல்லாத தேவாலயங்கள் இந் நாட்டில் இல்லை யென்றே சொல்லலாம். கழுமலம், நல்லூர்ப் பெருமணம், சிதம்பரம் இவ்விடங்களில் இன்றுங் காணலாம். இச் சாசனங்களால் இவன் சைவசிகாமணியாயிருந்துங் குடிநலங் கருதிப் பிறசமயங்களையும் ஆதரித்தானென்று தெரிகிறது. இத்தகைய சிறப்புவாய்ந்த இவ்வரசர்கள் காலத்து மிகப் பரவிய சோழநாடு மண்டலங்களாகவும், கோட்டங்களாகவும், கூறுகளாகவும், தனியூர்களாகவும், பெரியநாடு, நகரம், கிராமங்களாகவும் ஏற்றவாறு பிரிக்கப்பட்டுத் தனித்தனி ஆட்சி செய்யப்பட்டன. இவற்றுட் பெரும் பிரிவாகிய மண்டலத்தையாள்வோர் இராஜவம்சத்தைச் சேர்ந்த ஒரு பெருந்தகையினராவர். இவர் மண்டலீகரென் றழைக்கப்படுவர்.

ஒவ்வொரு அரசர்கட்குந் தனித்தனி மந்திராலோசனைச் சபையும், அரச பரிபாலன சபையும் இருந்தன. இச்சபையின் பிரதிநிதிகளை நகரத்தவர்களே தேர்ந்தெடுப்பார்கள். அரசனே அனைவர்க்குந் தலைவனாயினும், பிரதிநிதிகளைத் தழுவியே எல்லாச் செயல்களும் புரிவது வழக்கம்.

இவ்வரசர் காலத்துத் தானஞ்செய்யப்பட்ட நிலங்கள் தேவதானம், சாலாபோகம், பட்டவிருத்தி, பள்ளிச்சந்தமெனப் பல பெயருடையன. இவற்றுள், தேவதானமென்பது ஆலயங்கட்கு அளித்தவை. சாலாபோகமென்பது அறச்சாலைகட்கு உரிமையாக்கியவை. பட்டவிருத்தியென்பது அந்தணர்கட்குத்

தானஞ்செய்தவை. பள்ளிச்சந்தமென்பது ஜைன, பௌத்த கோவில்கட்குக் கொடுத்தவை. அரசன் ஊர்களைத் தானஞ்செய்யும்பொழுது இறையிலி நிலங்களை நீக்கியே கொடுப்பான். இன்னும் ஊர்நத்தமும், திருக்கோயில்களும், குளங்களும், ஊடறுத்துப் போகும் வாய்க்கால்களும், பறைச் சேரிகளும், கம்மாளச் சேரியும், சுடுகாடும் முதலியனவும் நீக்கவேண்டியவைகளே.

நாடுகள் தோறும் நிழல்தரு மரங்களையுடைய சாலைகளும், பெருவழிகளும் இருந்தன. சோழமன்னர்கள் தங்கள் நாடுகளை நீர்வளமுடையனவாகச் செய்வதில் மிகக் கருத்துடையவர்கள். இதுபற்றியே இந்நாடு புனனாடெனப் போற்றப்படுகின்றது. பெருவளவன் வாய்க்கால், வீரசோழனாறு, முடிகொண்டான் வெட்டாறு முதலிய பல நதிகளும், கங்கை கொண்ட சோழபுரத்தேரி, காவேரிப்பாக்கத்தேரி முதலிய பல ஏரிகளும் இச் சோழமன்னவர்கள் ஆளுங்காலத்து உண்டாயினவே.

படைகளை ஆள்வார்க்கு மகாசாமந்தன், சேனாபதிசாமந்தன் என்னும் பெயர்களும், சிறுபடையாள்வார்க்குத் தண்டநாயகன், சாமந்தன் என்னும் பெயர்களும் வழங்கிவந்தன. இவர்களது பட்டாளங்கள் இராஜ இராஜத்தெரிந்த வலங்கை வேளைக்காரர், பராந்தக கொங்கவாளர், நிகரிலி சோழத்தெரிந்த உடனிலைக் குதிரைச் சேவகர், சிறுதனத்து வடுகக் காவலர், மும்முடி சோழத் தெரிந்த ஆனைப்பாகர் என்று அழைக்கப்படும்.

இன்னும் சோழ வேந்தர்கள் பலவகைப்பட்ட பெரிய கப்பற் சேனைகளும் உடையராய் இருந்தனர். இராஜேந்திரன் காலத்துக்கடாரஞ் செற்றதும், ஈழநாட்டைப் பலதரம் வென்றதுமே இதற்குப் போதிய சான்றாம். இந் நன்மைகளுட் பெரும்பாலன இராஜஇராஜனாற் செய்யப்பட்டன.

இவ்வரசன் செய்த பல நன்மைகளுட் சிறப்புடையது தன் இராச்சியத்துள்ள நிலமுழுதும் அளப்பித்துக் குடிகளிடம் ஆறிலொரு கடமை வாங்கச் செய்ததேயாம்.



இவ்வாறு குடிகட்குப் பலவகையினும் நன்மையே புரிந்த அபயகுல சேகரனை இராஜஇராஜன், அந்நாட்டின் பழமைமிக்க திருப்பதிகளுள் ஒன்றாய், மனுவேந்தனாற் கோல்கோடா நெறி செலுத்தப் பெற்றதாய், திருமகள், முசுகுந்தன் முதலியோராற் பூசிக்கப்பெற்றதாய், ஐம்பூதத் தலங்களுள் ஒன்றாய், பிறக்க முத்திதருந் தலமாய் விளங்குந் திருவாரூரில் வசித்துத் தரணியை ஆண்டு, நாடோறும் நல்லியற் புலவருடனும், திருவருட்பெருஞ் செல்வருடனும் அளவளாவி விநோதமாகக் காலங் கழித்து வந்தமையால், நித்திய விநோதனென்று யாவருங் கொண்டாட வாழுங்காலத்து, அறிஞர் சிலர் தாங்கள் கர்ண பரம்பரையாகக் கேட்டுணர்ந்த திருமுறைப் பாசுரங்கள் சிலவற்றை யோதக்கேட்டு அளவிலா மகிழ்ச்சியும், அன்பும் உடையனாய், அவையனைத்துங் கேட்க வேண்டுமென்னும் அவா மேலிட்டு, அவற்றைத் தேடுதற்குரிய பல நன்முயற்சி செய்து வந்தான்.

அக்காலத்து, இவனது ஆட்சிக்குட்பட்ட சோழவளநாட்டில், ஆதிமாதவமுனி அகத்தியன்றரு, பூதநீர்க்கமண்டலம் பொழிந்த காவிரியின் வடகரைத் திருப்பதிகளுள் ஒன்றாய், நடராஜப்பெருமான் எழுந்தருளிய சிதம்பரதலத்தின் தென்மேற்றிசையில் உள்ள திருநாரையூரில் விநாயகப்பெருமான் திருவருள் பெற்ற ஒரு பெரியார் இருப்பதாகக் கேள்வியுற்றான். இத் திருநாரையூர் தேவதத்தனெனுங் கந்தருவன் மரத்திலேறிக் கனிபறிக்கையில் ஒருகனி அம்மரத்தடியில் தவஞ்செய்து கொண்டிருந்த துர்வாசமுனிவர் முன் வீழ்ந்து அவரது யோகநிலையைக் கலைக்க, அதனால் அவராற் சாபமெய்தி நாரையாகப்பிறந்து கடவுளை வழிபட்டு முத்திநிலை கூடிய திருப்பதி. ஆளுடைய பிள்ளையார் அருளிய மூன்று திருப்பதிகங்களும், அப்பர்சுவாமிகள் வாய்மலர்ந்த குறுந்தொகையும், தாண்டகமும் ஆக ஐந்து பதிகங்களுடையது. பிள்ளையார்பாடிய பதிகங்களில் "அண்ணல் மன்னியுறை கோயிலாகும் அணிநாரையூர்" என்றதனால் மூர்த்தி விசேடமும், "நலந்தாங்கு தேம்புனல்சூழ் திகழ்மாமடு[illegible] நாரையூர்" என்றதனால் தீர்த்த விசேடமும், "[illegible]பதும் புக

16172
031 211
25-3-10

மோங்கு செம்மைத் திருநாரையூர்" என்றதனால் தலவிசேடமும் ஒருங்கமையப் பெற்றது. தாண்டகவேந்தர் "நரலும்வாவி நன்னாரையூர்" என்றும், "நாடுதங்கிய நாரையூர்" என்றும் உரைத்தனவும் இவற்றை வலியுறுத்தும்.

சுவாமி பெயர் - சௌந்தரேஸ்வரர்

அம்பிகை - திரிபுரசுந்தரி

தீர்த்தம் - காருண்ய தீர்த்தம்

ஸ்தலவிருக்ஷம் - புன்னாகம்

இது நம்பிகள் பாடிய இரட்டைமணி மாலையில் :—

என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலை வியனாரையூர் முக்கண்
அரசுமகி ழத்திமுகத் தான்.

என்றதனாலும் உணர்க. இன்னும், புகலிவேந்தர்

"தேசமுறப் புகழ்பெற்ற செம்மைத் திருநாரையூர்"

என்றும் பலவிடங்களில்,

"செல்வத் திருநாரையூர்"

"பாமருவுங் கணத்தோர்க ளீண்டிப் பலவும் பணிசெய்யுந்
தேமருவுந் திகழ்சோலை சூழ்ந்த திருநாரையூர்"

எனவும், நாவரசர்

"நாடுதங்கிய நாரையூர்"

என்றும் அருளிச்செய்தமையால், இந்நகரவாசிகள் எக்காலத்தும் பற்றுதல் இல்லாத பெருஞ்செல்வமுடையரென்பதும், நல்லாற்றினீட்டிய தம்பொருளைக் கொண்டு, சிவபெருமானுக்கும், தொண்டர்கட்கும் வேண்டிய உதவிபுரிதலாகிய நற்பணி பலவியற்றுந் தகுதியினரென்றும் உணரக் கூடியதாகின்றது.



மேலும், இந்நாரையூர்த் திருப்பதிகங்களில், "செம்மைத் திருநாரையூர்" என இரண்டிடத்தும், "திருவளர் செம்மையாகி அருள்பேறு மிக்கதுளதென்பர் செம்மையினரே" என்றும் செம்மை மொழிப்பிரயோகங் காணப்படுதலின், அதன் உண்மையைச் சற்று நோக்குவாம்.

திருத்தொண்டர் புராணத்துள், திருஞானசம்பந்தர், திருவாலங்காட்டின் அருகேசென்றார் எனக்கூறுமிடத்துத், தொண்டர் சீர்பரவுவார் வேளாளர் வாழும் அப்பதியைச் "செம்மைநெறிவழுவாதபதி" யென்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தும், அவ்வாறே 'மெய்ம்மை நிலை வழுவாத வேளாள விழுக்குடிமைச் செம்மையினார் பழையனூர்த் திருவாலவனஞ் சேர்ந்தார்" என்றும், திருத்தொண்டத் தொகையில் வேளாளர் குலத்தில் தோன்றிய அப்பர் சுவாமிகளைப் பற்றிப் பாடிய காலத்து ஆரூரர், "திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரையன்" என்றும், சேக்கிழார் சுவாமிகளும், இந்நாவுக்கரசு சுவாமிகளைப் புகழுமிடங்களில், திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட என்பதனை விளக்கியே "அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா வன்புருகு, மெய்த்தன்மை யன்புடைய விழுத்தவத்து மேலவர்" "பேதமிலா ஒருணர்விற் பெரியவர்' என்றும், இவை முதலாகப் பலவிடங்களில் விளக்கியும், உள்ளவற்றை நோக்க, இந்நகரமானது, வாயிலார், சத்தியார், விறன்மிண்டர், வாக்கரையர், பழையனூர் வேளாளர் எழுபதின்மர் முதலானவர்களின் குலத்தவர்களாய், சிவபத்தி, சிவனடியார்பத்தி, வாய்மை, ஒழுக்கம், ஈகை முதலிய எல்லா நற்குணங்களும் நிரம்பிய வேளாளர் நிலைத்துவாழும் பெருமையுமுடைய பதியென்பது போதரும்.

திருநாவுக்கரசுநாயனார் இந்நகர்த் திருத்தாண்டகத்தில் "நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே" எனப்பாடியது, ஐயாற்றின் வடகயிலைக் கோலங்கண்டனென்று பாடிய "கண்டேனவர் திருப்பாதம்" என்றதனோடு ஒப்புடைத்தாய் நிற்றலானும், ஆரூரர் கழுமலத்திற் பாடிய "சாதலும் பிறத்தலும்"

என்னும் பதிகத்தின் ஈற்றடியாகிய "கழுமலவள நகர்க்கண்டு கொண்டேனே" என்பதற்கு சேக்கிழார் சுவாமிகள் கைலையில் வீற்றிருந்தபடி கண்டதாகப் பொருள் கொண்டு,

மண்டியபே ரன்பினால் வன்றொண்டர் நின்றிறைஞ்சித்
தெண்டிரைவே லையின்மிதந்த திருத்தோணி புரத்தாரைக்
கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படியென்று
பண்டருமின் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினார்

எனக்கூறியதனாலும், இந்நகரம் கைலாசத்தேதொடர்புடையதென்பதும், திருநாவுக்கரசு சுவாமிகட்கு இந்நகரம் கைலைக்காட்சி தந்ததென்பதும் உணரக்கிடக்கின்றது. சம்பந்தர் புராணம் பாட்டு 143, 'வெள்ளிமால் வரை யென்னத் திருத்தோணி வீற்றிருந்த வள்ளலார்' என்பதும் இங்குக் கவனித்தற் குரியது.

திருஞானசம்பந்த சுவாமிகள் "பாம்பினை வீக்கிய பண்டாங்கன் பாதம் பணிவோமே" என்புழி பண்டாங்கனென்பது பண்டரங்க மென்னுங் கூத்தினை யுடையான் எனப் பொருள்படும். சிவபெருமானது கூத்து பண்டரங்கம், கொடு கொட்டி, காபால மென மூவகைப்படும். இம்மூன்றனுட் பண்டரங்கமென்பது தேவாசுரயுத்தத்தில் தேர்மேல் நின்று திசைமுகன் காண ஆடிய ஆட்டம். கொடுகொட்டி யென்பது திரிபுரமழிந்தகாலை உமையவள் கண்டு சீர்த்தாளமிசைக்க ஆடிய கூத்து. காபால மென்பது பிரமன் தலையோட்டைக் கையிலேந்திய காலத்து ஆடிய கூத்து. இவற்றை,

" தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பண் டரங்கமும்
பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேவல் கேட்ப
உமையவள் ஒருதிற னாக ஓங்கிய
இமையவ னாடிய கொடு கொட்டி
யாடலும்" (சிலப்பதிகாரம்)

எனவும்,



"படுபறை பலவியம்பப் பல்லுருவப் பெயர்த்துநீ
கொடு கொட்டி யாடுங்கால்"

"மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து
பண்டரங்க மாடுங்கால்"

"கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்புரளத்
தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கால்" (கலித்தொகை.)

என்றும் கூறியவற்றிற்கு எழுதிய நச்சினார்க்கினியர் உரையான் உணர்க. கல்லாடம் "வடவனத்து" என்ற செய்யுளினும், திருவிளையாடல் மாறியாடிய படலத்தினும் இக்கூத்து விகற்பங்கள் விரித்துக் கூறப்படுகின்றன.

இத்தகைய சிறப்புக்கள் பலவற்றையுடைய இத்திருநாரையூரில் அநாதிசைவராகிய சிவபெருமான் வழித்தோன்றிய ஆதிசைவர் குலத்தில் அவதரித்த பெரியோரே நாம் எடுத்துக் கொண்ட குருமூர்த்திகளாகிய நம்பியாண்டார் நம்பிகள்.

இப்பெரியார், இராஜராஜனாகிய அபயகுல சேகரசோழமகாராஜா காலத்திலும், (985—1013) பின்னிட்ட சில வருடங்களிலும் இருந்தாரென்பது திருத்தொண்டர் திருவந்தாதியில் இவ்வரசன் பெயரமைத்து "கொங்கிற்கனக மணிந்த ஆதித்தன் குலமுதலோன்" எனப் பாடியதனாலும், நூல் செய்வோர் தங்கால மன்னவனைப் புகழ்தல் அக்காலமரபென்பதற்குப் பெரியபுராணமே போதிய சான்றாய் நிற்றலானும், திருமுறை கண்ட புராணம் 1, 2 செய்யுட்களில் "இராஜ ராஜன் அரிய முறைதேட" என்றதனால் இவனே திருமுறைகண்ட சோழனெனப் பெறப்படுதலானும், இவன் மகனாகிய இராஜேந்திரனைப்பற்றிய கல்வெட்டுக்களில் நம்பிகளைப்பற்றியும் வரையப்பட்டிருத்தலானும், விளங்குகின்றது.

(தொடரும்)

---

# திருக்கோயில்களில் சில திருத்தங்கள்

[காரைக்குடி அரு. சோமசுந்தரஞ் செட்டியார்]

நமது திருக்கோயில்களிலே செய்யவேண்டிய திருத்தங்கள் பலவுள்ளன. அவைகளை விரித்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கோயிலமைப்பு

கோயில் பொதுவாகக் காற்றும் வெளிச்சமும் நிறையத் தாராளமாக வரும்படி ஆங்காங்கு வெளிகள்விட்டும், சன்னல்கள் வைத்தும் அமைக்கப்படல் வேண்டும். இறுக்கமாக இருட்டுக் குகைகள் போலிருத்தல் ஆகாது. ஒவ்வொரு சுவாமி எழுந்தருளியிருக்கும் அறையிலும் காற்றும் வெளிச்சமும் நிறைய இருத்தல் வேண்டும். பகலில் விளக்கேற்றிவைக்கும்படி அறைகள் இருத்தல் கூடாது. அறைகளில் எண்ணெய், கழிவுற்ற மலர் முதலிய அழுக்குகள் நாடொறும் கழுவப்படல் வேண்டும். தரைகள் எல்லாம் எண்ணெய்ப் பசையின்றிச் சுத்தமாக இருத்தல்வேண்டும். பிராகாரத்தில் நெரிஞ்சிமுள் தேங்காய் ஓடு முதலியவைகளின்றிச் சுத்தப்படுத்தி வைத்திருத்தல்வேண்டும். தீர்த்தத்தொட்டியில் ஒருமாதம் இரண்டுமாதங்கள்வரை தண்ணீரைத் தேங்கவைத்து நாறிப் புழுக்கும்படி செய்தல் கூடாது. வாரத்திற்கொருமுறை அவைகளை நன்றாகச் சுத்தப்படுத்துதல் வேண்டும். கழிவுற்ற மலர்மாலைகளை ஆங்காங்கு எறியாது ஒரு இடத்தில் சேர்த்து வாரத்திற்கு ஒரு முறை வெளியேற்றுதல் வேண்டும். விளக்குகளிலிருந்து வடியும் எண்ணெய் கீழே விழாதபடி அடியில் தட்டுகள்வைத்துச் சுத்தமாக வைத்திருத்தல்வேண்டும். அபிடேக தீர்த்தத்தைத் தரைகளில் எங்கும் ஓடவிடாதபடி தூப்பாய்களின் வழியே செல்லுமாறு செய்தல் வேண்டும். அல்லது சிறு தகரங்கள் வைத்துப்பிடித்துக் கொண்டுபோய்க் கொட்டுதல்வேண்டும். இரவில் கோவில் நிறையத் தீபம் போடுதல்வேண்டும். வருகின்ற அன்பர்கள் பூசிக்கொள்ளும்படி விபூதிப்பெட்டி ஒன்று ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கோயிலுக்கும் சில சாம்பிராணி தூபக்கால்கள் அவசியம் இருத்தல்வேண்டும்.



## திருக்குளம்

நல்ல தண்ணீர்ப் போக்குவரவுடைய திருக்குளங்களையே உபயோகப்படுத்துதல் வேண்டும். பாசிக்குளங்களைத் தூர்த்துவிட்டு அவ்விடங்களில் பெருங் கேணிகளை வெட்டுதல்வேண்டும். பாசிக்குளங்களால் வருங்கேடுகள் பல. முதலாவது அவைகளின் நாற்றம் அன்பர்களைக் கோயிலுக்குள்ளே புகவிடாது தடுக்கிறது. தெரியாது உபயோகப்படுத்துபவர்களுக்குப் பல நோய்களை உண்டாக்குகின்றது. சில கோயில்களில் தீர்த்தத் தொட்டித் தண்ணீரை நல்ல திருக்குளங்களில் வடிக்கிறார்கள். அவ்வாறு செய்தலாகாது.

## மடைப்பள்ளி

கோயிலுக்குள் ஒருபாகத்தில் தனியிடத்திலேயே மடைப்பள்ளி இருத்தல்வேண்டும். காற்றும் வெளிச்சமும் அமைந்திருக்கும்படி மடைப்பள்ளிகளைக் கட்டுதல்வேண்டும். மடைப்பள்ளிப் புகையைக் கோயிலுக்குள் வரவிடாது, புகைக்கூடுகளை விசாலமாக வைத்து வெளியே போகச்செய்தல் வேண்டும். கழுநீர் முதலிய அழுக்குகளை ஒரு தொட்டியில் சேர்த்து நாள்தோறும் அப்புறப்படுத்துதல் வேண்டும். சுயம்பாகிகளைச் சுத்தமாக இருக்கும்படி சொல்லுதல்வேண்டும். நோயாளிகளைச் சுயம்பாக வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது. நைவேத்தியத் திட்டத்தைக் குறைவாகவே வைத்திருத்தல் வேண்டும். சாதங்களைக் கல்லும் மண்ணும் கலந்திருக்கும்படி சமையாது சுத்தமாகச் செய்யும்படி செய்தல்வேண்டும். சாதத் தட்டுகளில் மூடும் துண்டுகள் அழுக்கில்லாதனவாக விருத்தல் வேண்டும்.

## வழிபாடுகள்

நாள்தோறும் வழிபாடுகள் குறிப்பிட்ட நேரங்களில் நடைபெறுதல்வேண்டும். அகாலத்தில் நடாத்தக்கூடாது. திருவிழாக்காலத்தில் தாசியாட்டம், சில்லரை விளையாட்டுக்கள்

முதலிய வீண் ஆடம்பரங்களை விடுத்து அன்பு நெறியை வளர்க்கும் முறையில் விழாக்களைச் சரியான நேரத்தில் நடாத்துதல் வேண்டும். காலைவிழா ஆறுமணிக்கு ஆரம்பமாகி எட்டுமணியளவில் முடிந்துவிடுதல் வேண்டும். இரவில் ஏழு மணி முதல் பத்துமணிவரை விழா நடைபெறுதல் வேண்டும். தெருக்கூத்துமாதிரி திருவிழாக்களை நள்ளிரவில் நடாத்துதல் கூடாது.

## சமய அறிவைப் புகட்டுதல்

உருவ வழிபாடு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு சமய அறிவை அன்பர்களுக்குப் புகட்டுதலும் இன்றியமையாத தாகும். புறமதத்தினர் மக்களுக்குச் சமய அறிவைப் புகட்டுங் கொள்கையை இறுகக் கைக்கொண்டிருக்கிறார்கள். கோயில் களில் செய்யவேண்டிய முக்கியமானவேலை மக்களுக்குச் சமய அறிவைப் புகட்டுதலேயாகும். எனவே, ஒவ்வொரு திருக் கோயிலினும் திருவோலக்க மண்டபத்தில் நாடொறும் புராண படனம் நடைபெறல்வேண்டும். கோயில் தொண்டர்களுள் இதற்கென ஒரு அறிவாளர் அவசியம் அமைக்கப்பெறல் வேண் டும். பேரன்பர்களைக்கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் செய்வித்தல் வேண்டும். ஒரு இடத்தில் “சமய நூல்களைத் தொகுத்துப் புத்தக நிலைய மொன்றினை யமைத்து மக்களைப் படிக்கும்படி செய்தல் வேண்டும். சமய அறிவை வளர்த்தற்கேற்ற துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வருகின்ற அன்பர்களுக்கு வழங்குதல் வேண்டும். விபூதிப் பைகளையும் உருத்திராக்க மணிகளையும் நிறைய வாங்கி வைத்துக்கொண்டு அன்பர்களுக்கு அளித்தல் வேண்டும். புராணபடனம் செய்யும் சமயபோதகர் இப்பொறுப்புக்களை யெல் லாம் நிர்வகித்தல்வேண்டும். ஒவ்வொரு கோயில்களினும் இன் னிசையுடன் தமிழ்மறை யோதுதற்கு ஓதுவார் மூர்த்திகள் சிலர் அமைக்கப்பெறல் வேண்டும்.

## கோயில் வேலைக்காரர்கள்

கோயிலில் வேலைசெய்வோரனைவரும் சுத்தமுடையவர் களாக—அன்பர்களாக—இருத்தல் வேண்டும். வருகின்ற அன் பர்களை விரட்டி யடிப்பவர்களாக விருத்தல்கூடாது. அன்னோ ரனைவரும் விபூதி ருத்ராக்ஷதாரண முடையவர்களாக விருத்தல் வேண்டும். அவர்கள் வருகின்ற அன்பர்களைப் பணங்கேட்டுத் தொந்தரவு செய்தல் கூடாது.



## கட்டணங்கள்

அர்ச்சனை முதலியவற்றிற்குச் சுலபமான கட்டணங்களே விதிக்கப்பெறல் வேண்டும். விழாக்காலங்களில் திருவீதியில் சுவாமி எழுந்தருளி வரும்பொழுது, கற்பூரஹாரத்தி, திருக் கண் சாத்துதல் முதலியவற்றிற்கு அதிகக்கட்டணம் விதித்தல் கூடாது. விழாக்காலத்தில் கோயிலில் நடைபெறும் சுங்கவரி முறை அடியோடு நிறுத்தப்பெறல் வேண்டும். அபிஷேகம், ஆராதனை முதலியவற்றிற்கும் அதிகமான கட்டணம் விதிக்கக் கூடாது. உண்டியலில் அன்பர்கள் மனமாரப்போடும் பணத் தையே பெருமகிழ்வுடன் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## அன்பர்கள்

சுவாமி தெரிசனஞ்செய்ய வரும் அன்பர்கள் குளித்து நல்லாடை புனைந்து, நீறு கண்டிகை பூண்டு மெய்யன்பர்களாக வருதல்வேண்டும். அமைதியாக ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டு இரைந்து கூச்சலிடாது வழிபாடு செய்துகொண்டு செல்லுதல்வேண்டும் கோயிலை எச்சல் துப்பியோ, மூக்குச் சிந்தியோ, வேறு எவ்வழியினுமோ அசுத்தப்படுத்தக்கூடாது.

## தரும கருத்தர்கள்

தரும கருத்தர்களாக வருபவர்கள் அப்பேறு பெற்றது தமது தவச்செயலென எண்ணி இன்புற்று, உண்மை அன்புடன் கோயில் வேலைகளைச் செவ்வனே செய்துவரல்வேண்டும். வீண் ஆடம்பரச் சடங்குகளில் கோயில் பணத்தை விரையஞ்செய்யக் கூடாது. சமய அறிவை வளர்க்கும் நெறியிலேயே செலவழித் தல் வேண்டும். சுவாமி தெரிசனஞ்செய்ய வருவோரனைவரும் மனமகிழுமாறு கோயிலைத் திறமையாக நடாத்துதல் வேண்டும். எச்சாதியினராயினும் அன்பர்களாயின் இறைவனை வழிபட் டின்

புறம்படி ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். வெறுஞ் சிறு பூசல்கள்—விபூதி பிரசாதம் முதலில் கொடுக்கும் வழக்கு முதலிய கலவரைகள் நிகழாதவாறு தக்கனசெய்தல் வேண்டும். சுவாமிக்கு வழிபாடு நடைபெற்ற பின்னர் தமிழ்மறையோதி முடிந்த பிறகே எல்லோருக்கும் விபூதி பிரசாதம் வழங்கும்படி செய்தல் வேண்டும். கற்பூரதீபம், அலங்காரதீபம் முதலியவற்றை வாயினாலணைக்காது விசிறிகளாலணைக்கும்படி தொண்டர்களுக்குச் சொல்லிவைத்தல் வேண்டும். வாகனங்களில் சுவாமி எழுந்தருளி வரும்பொழுதும், தேரின்மீ திவர்ந்து வரும்பொழுதும் பிறகாலத்தும் எக்காரணத்தை முன்னிட்டும் உயிர்ப்பலியிடுதல் கூடாது. கோயில்களில் நடைபெறும் எல்லாக் காரியங்களும் நுண்ணறிவுகொண்டு ஆராய்ந்து செய்யப்படல் வேண்டும். மூடத்தனமான நிகழ்ச்சிகள் நிகழ்தலாகாது. அறிவுடன் செய்யும் செயலே சிறப்புடையதாகும். தருமகருத்தர்களுடைய கண்ணுங்கருத்தும் கோயில் நடைமுறைகளை அன்பு நெறி வளர்ச்சிக்கேற்ற முறையில் மக்களுக்குச் சமய அறிவையும், மகிழ்ச்சியையும், சுகத்தையும் நல்கும்வழியில் செட்டான செலவில் செம்மையாகச் செய்தலில் பதிதல் வேண்டும்.

---

# "ஆசுவயுஜமும் ஐப்பசியும் ஒரேமாதம்"

[தா. முத்துக்கருப்ப பிள்ளை]

வடமொழியில் ஆசுவயுஜமென்னும் மாதமும் தென்மொழியில் ஐப்பசி என்னும் மாதமும் சொல்வேற்றுமையால் இரண்டாக வழங்கப்படினும் பொருள் வேற்றுமை சிறிதுமின்மையால் அவ்விரண்டும் ஒரே சௌரமாதமெனப்படும். அங்ஙனமாயின் சௌரமாதமென்றும் சாந்திரமாதமென்றும் அவைகட்கு ஆரம்பமும் முடிவும் வேறுவேறு காலமென்றும் ஏற்பட்டு இதுகாறும் வழங்கிவருதலால் ஆசுவீஜமும் ஐப்பசியும் வேறுவேறு



மாதமே யாமெனின், ஆசுவயுஜ மாதத்துக்குக் காரணமாகக் கூறும் அசுவினி நட்சத்திரத்தோடு பருவம் சேராதிருப்பின் ஆசுவீஜம் எங்ஙனமாம்? ஆகாமையால் ஆசுவயுஜ மாதத்தைச் சாந்திர மாதமாகக் கொள்வதும் கூறுவதும் வீணே. ஆகலின், அவ்விரண்டும் ஒரே சௌரமாதமே யாமென்க. சூரிய சித்தாந்தம் இறுதி அத்தியாயம் 16-வது சுலோகப்படி இரேவதி அசுவினி பரணி என்னும் நட்சத்திரங்களில் ஒன்றில் பருவம் சேர்ந்து ஆசுவயுஜ மாதமாகுமென்னில், இதற்குப் பருவம் சேர்ந்த நட்சத்திரப்பெயர் மாதப்பெயராமென்னும் பாணிநி சூத்திரார்த்தமும் அமர சுலோகார்த்தமும் முரண்படுகின்றன. இவைகட்கும் பருவாந்த நட்சத்திரப்பெயர் மாதப்பெயராமென்னும் சூ. இ. 15-ஆவது சுலோகார்த்தம் மிகவும் முரண்படுகின்றன. முரணின்றெனக் கொள்ளின், சூ. இ. 16-ஆவது சுலோகப்பொருள் தூலமும், பாணிநீயம் அமரமென்னும் நூற்களின் பொருள் சூக்குமமும், சூ. இ 15-ஆவது சுலோகப்பொருள் காரணமு மாகும். ஆகவே காரணம் பிரபல பிரமாணமெனப்படும். படவே, "பர்வாந்த நட்சத்திரப்பெயரே மாதப்பெயர்" என்பது சிந்தாந்தமும், ஏனைய ஸ்தூல சூக்குமங்கள் பூர்வபக்கமும் ஆகின்றதினாலே சூ. இ. 16-ஆவது சுலோகம் பயனின்றி முடிந்தன. முடியவே ஆசுவயுஜமென்பது சாந்திரமாத மன்றென்று தீர்மானிக்கலாயினவென்க. இத்தாஷ்டாந்தங்களுக்கு பின்வருமாறு திருஷ்டாந்தங்களும் கூறுதும்.— "கொண்டவனை விடுத்து அவனுடன் பிறந்தானோடேனும் அன்னியனோடேனும் கூடிச்சுகிக்கும் பெண் பதிவிரதை யாகாவாறுபோல் ஆசுவயுஜ மாதத்துக்குரிய அசுவினி நடசத்திரத்திரத்தோடன்றி இரேவதி பரணியோடேனும் வேறு நட்சத்திரங்களோடேனும் பருவம் சம்பந்தமாயின் ஆசுவயுஜமாத மாகாவென்பது திண்ணம். அங்ஙனம் அசுவினி சம்பந்தமாகாதிருக்கும் பருவத்தைக் கொண்டு ஆசுவயுஜமென்று கூறுகிறது மலடிமகன் எனக்கூறுகின்றதையும் நிகர்க்கும்.

சாந்திர மாதமெனக் கூறுகின்றது சௌர மாதமேயாமென்பதற்குப் பின்வருமாறு பிரமாணங்கள்:—

உத்தரகாரணாகமம் உபாகோத்ஸவ விதிப்படலத்தில்

" மேஷ சங்கிராந்தி காலேது ஆஸ்வீஜவிஷுவேதாதா |

"விஷுகாலேது சம்ப்ராப்தே விப்ராணும் வியாதிபீடிதம்" என்றும் "ஆஷாஷ ஸங்க்ரமேஸ்ப்ருஸ்யபூ பூஜாநாந்துபீடதா" என்றுமுள்ள சுலோகங்களுக்கு முறையே சித்திரைமாதப் பிறப்பாகிய விஷுகாலத்திலே கிரகணமுண்டாயின் பிராமணருக்கு வியாதி பீடையும் ஆடிமாதப்பிறப்பில் கிரகணமுண்டாயின் அரசர்களுக்குப் பீடையு முண்டாமென்பது பொருள். இச் சுலோகங்களிலுள்ள ஆசுவீஜம் ஆஷாடமென்னும் இரண்டையும் சாந்திரமாதங்களாகக் கொள்ளுமிடத்து அவைகளுக்கு முறையே விஷுவென்பதும் சங்க்ரமமென்பதும் இதுகாறும் நூல்வழக்கினும் அனுபவ வழக்கினும் இல்லாமையால் அவைகள் முறையே ஐப்பசி என்னும் ஆடி என்னும் சௌரமாதங்களேயாயின.

மேற்காட்டிய ஆகமம் மாதபூஜாபடல அவதாரிகைகளில் "ஆஸ்வயுஜம்" "ஆஷாடம்" "ஜ்யேஷ்டம் வைசாகம்" "மாகம்" "புஷ்யம்" "ஸாபம்" "தனு" என்னு மாதங்களும் இவைகட்கு நிரனிறையே அவ்வவ் வவதாரிகைகளுக்குரிய சுலோகங்களில் "துலாராசி கதேபாநு" "பாநன கர்கடகே" "ஜேஷ்டமாசி" "வருஷே பாநு" கும்பஸ்தேரவி" "மகரஸ்தேதிவாநாதே" "சாபமாஸெ" "ஸாபம் ப்ராப்தேசவிதரி" என்னு மாதங்களுமிருக்கின்றன. இதனல் ஒருபொருட்குப் பலபெய ரிருப்பதுபோல் தென்மொழியில் சித்திரை முதலிய சௌரமாதங்கட்கே வடமொழியில் மேஷரவி முதலியனவும் சைத்திர முதலியனவும் ஏற்பட்டன. அன்றி அச்சைத்திர முதலியவைகள் ஓர்போதும் சாந்திரமாதங்களாகா.

இதுவேயுமன்றி காமிகாகமம் முகூர்த்த நிர்ணயப் படலத்தில்:—

" மிதுநம்சிம்மமாஸஞ்சமேஷஞ்சவ்ருஷபந்ததா :
புஷ்யபால்குநகம்சைவாஷாண்மாஸமுத்தமம்பவேத் " ||



என்றுங் கூறுமாற்றால் புஷ்யம், பால்குநகம் என்னும் இரண்டும் முறையே தையும் பங்குனியுமாகிய சௌரமாதங்களேயாம். அங்ஙனமன்றி அவ்விரண்டையும் சாந்திரமாதங்களாகக் கொள்ளுமிடத்து புஷ்யமாசாரம்பம் மார்கழிமாதத்தும் பால்குநமாசாரம்பம் மாசி மாதத்தும் வரும். அங்ஙனம் வருவதில் மார்கழியும் மாசியும் சூன்யமாதமா யிருத்தலின் அம்மாதங்கள் முகூர்த்தங்கட்கு ஆகாமையால் புஷ்யமும் பால்குநமும் சௌரமாதங்களேயாம்.

ஆகமம் பிரபல பிரமாணமென்பதற்கு சங்கர சம்மிதை யுத்தகாண்டத்து ௩௫-வது அத்தியாயத்தில்

"ஆஸ்யமத்யேஸ்திதாவேதா தேவதேவஸ்யபூசுரா:
அட்சராணி சதந்தேஷுஜிஹ்வாயாந்துசிவாகம: |

பொருள்:— 'கேளீர் பூசுரர்களே! அந்தத் தேவாதி தேவருடைய வாயில் எல்லா வேதங்களும், அவர் பற்களில் அட்சரமனைத்தும், அவர் நாவில் சிவாகமங்களும் இருந்தன. தேவாதி தேவர் என்பது இங்கே சுப்பிரமணியக் கடவுள். வாயிற் சிறந்தது பற்கள், பற்களில் சிறந்தது நாவானதுபோல் வேதங்களில் சிறந்தது ஆகமங்கள் என்றாயிற்று."

அன்னபூரணி யுபநிஷத்தில் :—

"சிவஸ்ஸைவாகமஸ்த்தாநாம்"

பொருள்:—சைவாகம மார்க்கிகளுக்கு சிவனே கர்த்தா.

சிவபுராணம் அகத்திய சம்மிதையில் :—

ப்ரணவாத்யாமகாமந்த்ராத்யகாராத்யட்சராணிச
சிவக்ஞாநாநி திவ்யாநி காமிகாதிநி பூசுராঃ | ஸ்ரீத்தா
லாஸ்ய நாதஸ்ய ஸம்பவந்த்யூர் தவ வக்த்ருதঃ |
புநஸ்யதேவ தேவஸ்ய புருஷார்த்தஸ்ய வக்த்ருதঃ |
ஏகவிம்சதிபேதேநயுக்தருக்வேதமப்ராவீத்
யஜுர்வேதந்த்வேகஸதம்பேதயுக்தமகோரதঃ |
ஸஹஸ்ரஸாகாஸம்யுக்தம்ஸாமவேதந்துவாமதாঃ |
அதர்வம் நவதாபிநம்ஸத்யோஜாதேநஸாப்ராவீத் |

பொருள்.—"ஏ பூசுரர்களே! பிரவாணாதி மகாமந்திரங்களும் அகாராதி யக்ஷரங்களும் சிவஞாந மயமாகிய திவ்வியாகமங் களும் சிவபெருமான் ஊர்த்வமுகமாகிய ஈசான முகத்தினின் றுந்தோன்றின. பின்னும் அந்தப் பரமேசுவரனுடைய (அதோ முகங்களில்) தத்புருஷ முகத்தினின்றும்-21-சாகா பேதமா யுள்ள இருக்வேதமும், அகோர முகத்தினின்று 101 சாகாபேத மாயுள்ள எசுர்வேதமும் வாமதேவ முகத்தினின்று 1,000 சாகைகளோடு கூடிய சாமவேதமும், சத்தியோஜாத*முகத்தினி ன்று 9 சாகைகளோடுகூடிய அதர்வண வேதமும் தோன்றின."

முண்டகோப நிஷத்தில்:—

"த்வேவித்யேவேதிதவ்யே இதீய ஹஸ்மய
ப்ரம்ம - விதோவதந்தி பராசைவாபராச"

பொருள்: — 'இரண்டு வித்தைகளறியவேண்டும். பிரம்ம வித்துக்கள் இப்படியே அறிகின்றனர்.'' அவைகள் பரம் அபர மெனப் பேதப்பட்டு நிற்கும். அவற்றுள்

"தத்ராபரா ரிக்வேத யஜுர்வேத ஸாமவேதோ தர்வி
யவேதோவிக்ஷா வ்யாகரணச் சந்தோ நிருக்
தகல்போ ஜ்யோதிஷமிதி அதபராயாததக்ஷர
மதிகம்யதே"

பொருள்:—''இருக்கு, எசுர், சாமம், அதர்வண மென்னும் வேதங்களும் சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், கல்பம், ஜோதிஷமென்னும் வேதாங்கங்களும் அபர வித்தைகள். அட் சரங்களை அதிக்கிரமித்துள்ளது பரவித்தை. "அட்சராதிகம் யம் என்பது நாத நாதாந்தமாகலின் "நாதரூப சிவக்ஞாநம் பரவித்யா சொரூபகம் ஆகமஞ்சேதி விக்யாதம் பரவித்யாமயம் பவேத்'' பொருள் :—நாதரூபமாய் சிவஞானமயமாயுள்ள சிவா கமம் பரவித்தை''

சூதசங்கிதை சிவமான்மிய காண்டம் முதலாவது அத்தி யாயத்தில்:—



"அஷ்டாதச புராணாநாம் கர்த்தாசத்யவதி சுத:
காமிகாதிப்ரபேதஸ்யயதாதேவோ மஹேஸ்வர:

என்பதற்கு வித்தியாரண்ணிய சுவாமிகள்—"காமிகாதீ நாமாகம சம்ஹிதாநாம் சிவேனைவ ப்ரணயநாத் ப்ராமாண்யே யதாவிஸ்ரம்ப: | ஏவம் நாராயணைவ தாரேணவ்யாஸேநப்ரணய் நாத் புராணேஷ் வப்ய விஸேஷ:'' என்று வியாக்யானஞ் செய் திருக்கின்றனர். அன்றியும், அச்சூத சங்கிதையிலுள்ள பல சுலோகங்களுக்கு 'மிருகேந்திரம், சுப்ரபேதம், காலோத்தரம், சர்வஞானோத்தரம், சித்தாந்த சேகர முதலிய ஆகமங்களைப் பிரமாணங்காட்டியு மிருக்கின்றனர்.

இச்சுலோகத்துக்கு. பதினெண் புராணங்கட்கு - கர்த்தா வியாசர், காமிகாதி யாகமங்கட்கு கர்த்தா மகேசுரர் என்பது பொருள்.

மேற்படி சம்மிதை எக்ஞவைபவ காண்டத்து 20-ஆவது அத்தியாயத்தில் :—

"சைவாகமோதிவோ தர்மோவரிஷ்டோநைவஸம்ஸய:''

என்பது முதலிய மூன்று சுலோகங்களால் காமிகாதி யாகமங்கள் சர்வோத்கிருஷ்டமெனக் கூறுகின்றன.

ஸ்ரீமத் அப்பய தீக்ஷித சுவாமிகள் சிவதத்துவ விவேகத் தில்:—

"சிவாகமா நாமப்ரமாண்ய ப்ரலாபோ
உபிமூர்க்காணும் களஹஸ்திதா:''

என்பதற்கு "சிவாகமங்கள் பிரமாண மன்றென்று கூறும் மூர்க்க ருடைய பித்துரைகள் பிடர்பிடித்துத் தள்ளப்பட்டன.''

ஸ்ரீமத் அரதத்த சிவாசாரிய சுவாமிகள் சதுர்வேத தாத் பரிய சங்கிரகத்தில்:—

"வேதப்ரமாணமிதிஸங்கிரமாண்யேவ |
திவ்யந்த்வாகமமவைதிஜந: ப்ரமாணம் |
த்வத்யாநவாக்ய விஷயௌபயிகை: பதார்த்தே |
ராகூடமாகவிதவிக்ரகமாசமூலாத்''

பொருள்:—"வேதத்தை ப்ரமாணமாகக்கொண்ட சனங்களே உம்முடைய திவ்யாகமங்களையும் பிரமாணமென்று அறிகிறார்கள். ஏதனாலென்றால் உமது தியானத்தைக் கூறியது வேதம். அதனைச் செய்தற்கு வேண்டற்பாலதாகிய சொரூப லட்சணத்தை ஆகமங் கூறுதலால்"

அமிருத நாதோப நிஷத்தில்:—

"ஆகமாஸ்யா விரோதேந ஊகநந்தர்க உச்சியதே"

பொருள்:—ஆகமங்களுக்கு விரோதமில்லாத யுக்தியினால் தர்க்கம் செய்க; இனி விரிக்கிற் பெருகும். நிற்க.

இதுகாறுங் கூறியவாறு பிரபல பிரமாணமாயுள்ளவை காமிகாதி ஆகமங்களேயாயின. ஆகவே அவைகளில் காரணாகமம் பூர்வபாகத்தில் மஹோத்ஸவ விதிப்படலத்தில்:—

"ஸௌரமாஸம் ப்ரசஸ்தம்ஹி சாந்தரமா ஸோப்ரஸஸ்தகம்"

என்றும்,

காமிகாகமம் முகூர்த்த நிர்ணயப்படலத்தில்:

"பார்ஹஸ்பத்யம் சாந்திரமாநம் ஸௌரஞ்சேதித்
ரிதாமதம் | காரணம் ஸௌரமாநஞ்ச சூக்ஷமம்சாந்
த்ரமிதிஸ்மிருதம் | ஸ்தூலம் ஸ்யாத் பார்ஹஸ் பத்யம்ஸ
யாத்மாநத்ர முதாஹ்ருதம் | சூட்சுமம் ஸ்தூலம் பரித்
யஜ்யக்ருஹேத் காரணமுத்தமம் | ஸௌர மாநேந
கர்த்தவ்யம் ஸர்வகர்ம சுபாவகம் | பார்த்தே சால
யேஷுவேஷு ஸௌரமாநேந காரயேத் | ஸௌரமாநம்
விஹாயாத சாந்த்ராதிபி: க்ருதேத்யதி |
ஆயு ஸ்ரீ புத்ர நாசஞ்ச தத்கர்மம் நிஷ்பலம்பவேத்"

என்றுமுள்ள சுலோகங்களின் பொருள் —"சௌரமானம் பிரசஸ்தமுள்ளது சாந்திரமாநம் பிரசஸ்தமில்லாதது. பார்ஹஸ்பத்தியமாநம் சாந்திரமாநம் சௌரமாநமென மாநங்கள் மூன்று விதமாயிருக்கும். அவற்றுள் சௌரமாநம் காரணம், சாந்திரமாநம் சூக்ஷமம், பார்ஹஸ்பத்திய மாநம் ஸ்தூலம். ஸ்தூல சூட்சுமங்களை நீக்கிக் காரணத்தை கிரகித்தல் உத்தமம். சௌரமானத்தாற் செய்யின் எல்லாக் கன்மங்களும் சுபத்தைக்கொடுக்கும். பரார்த்தாலயங்களில் சௌரமானத்தாலே செய்யவேண்டும்; சௌரமானத்தை நீக்கி சாந்திரமானத்தாற் செய்வாராயின் ஆயிசு புத்திரன் செல்வம் நாசமாவதோடு அக்கன்மங்களும் பலன்கொடாது"



சிவபுராணம்

"த்விஜாதிநாம்சாந்த்ரமாநேவ்ரதாங்யபி பலந்திஹி:
உபாகர்மஞ்சபித்ர்யஞ்சசிவராத்ரிவிரதம்விநா"

பொருள்:—பிராமணர் முதலிய மூவருணத்தார் சாந்திரமானத்தில் விரதபலனைப் பெற விரும்பினும், உபாகர்மம், பிதுர்கர்மம், சிவராத்திரி விரதம் ஆகிய இவைகளை நீக்கி ஏனைய கன்மங்களைச் செய்க. விரும்பினும் என்ற உம்மையால் செய்யவொண்ணாதென்பதே கருத்தாம்.

ஸ்ரீகாமகோடி பீடாதிபதியாகிய ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அங்கீகரித்துள்ள தர்மசாஸ்திரச் சுருக்கம் 119-வது பக்கத்தில்,

"துலாஸ்நானம் உஷோப்யங்கம் க்ருத்திகா தீபமேவச
தநுர்மாஸிஹரே: பூஜா சிவாத்திரி வ்ருதம் ததா
ஸௌரமானேன கர்த்தவ்யம் சாந்திரமானே நகாரயேத்"

என்னும் வசனம் காணப்படுகிறது. இதன்பொருள்:—தீபாவளி, துலா ஸ்நானம், கார்த்திகை தீபம், தநுர்மாஸ பூசை, மகா சிவராத்திரி இவைகளை ஸௌரமானப்படிதான் செய்யவேண்டும். சாந்திர மானப்படி செய்யக்கூடாது என்பது. இதுபோல் ஒவ்வொரு நூலினும் ஒவ்வொரு கன்மமும் தனித்தனியேனும் சிற்சில கன்மங்கள் சேர்ந்தேனும் சௌரமானத்திலேயே விதிக்கப்பட்டிருக்கும். அது பல புராணேதிகாசங்களை ஆராய்ச்சி செய்யின் வெளிப்படும்.

சிவாலயங்களில் சிவபெருமானருளிய சிவாகம நெறியிலே, நித்திய நைமித்திகாதி பூஜை புரிதல்வேண்டும். சிவாகமத்துக்கு வேறாயுள்ள எந்நெறியினும் எவ்வகைக்கிரியையும் செய்ய

வொண்ணாது. செய்யின் உலகங்கெடும். இதனை "ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப், போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர், கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை, சாற்றிய பூஜை கடப்பிடிற் றானே" என்னும் திருமந்திரத்தா லுணர்க. அங்ஙனம் ஆகமநெறி வழுவாது பூஜைசெய்யினும், சௌரமானத்திலே செய்யவேண்டும். அன்றிச் சாந்திரமானத்திலே ஒருபோதும் செய்தலாகா. செய்யின் பயனின்றிப் பாவமுண்டாமென்பது ஆகமநூற்றுணிபு.

பிரமாண நூல்களுள் பிரபல பிரமாணமாயுள்ளவை காமிகாதி யாகமங்கள்; அவ்வாகமங்களில் பிரபல பிரமாணமென்றெடுத்தாளப்படுகிறது சௌரமானங்கள். இதனுள் சௌரமாதங்களையே சாந்திரமானங்களெனச் சாந்திரமானிகள் கொண்டனர். அங்ஙனங்கொண்டவர், அம்மாதங்கள் ஒவ்வொன்றிற்கும் சென்ற சௌரமாதச் சுக்கிலப்பிரதமை மாதாரம்பமும், நின்ற சௌரமாத அமாவாசை மாதமுடிவுமாக எல்லைகுறித்து, அவற்றுள்ளே பற்பல விரதாதிகளேற்படுத்தி அவ்வாறே அவர்களும் நடந்து, நூல்களெழுதிவிடுத்தும், எழுதிக்கொண்டு மிருக்கின்றனர். அவர், சௌரமாதங்களைச் சாந்திரமாதங்களாகக் கொள்ளும்போதே, சௌரமாதங்கள் சாந்திரமாதங்களாயினவென்று தெரியாதிருக்கும்பொருட்டு, ஆனி ஆவணிமாதங்களுக்குக் காரணமான முறையே மூலம், அவிட்டம் என்னும் நட்சத்திரங்களுக்குரிய மாதப்பெயர்களை நீக்கி, கேட்டை திருவோணமென்னும் நட்சத்திரங்கட்குரிய ஜேஷ்டம், சிராவணமென்னும் மாதப்பெயர்கள் வைத்துக்கொண்டனர். ஏனைய மாதங்களின் பெயர்கள் மாற்றப்படவில்லை. சென்றமாத சுக்கிலப்பிரதமை மாதாரம்பமும் நின்றமாத அமாவாசை மாதமுடிவும்போற் கொண்டவர் அம்மாத வரலாற்றிலக்கணங் கூறுதிருத்தல்வேண்டும். கூறியதனாலன்றோ இவ்வளவு வழக்கிற்கும் இடமுண்டாய்விட்டது. முந்திய மாதத்தில் மாதாரம்பமென்றவர் பிந்திய மாதத்தில் மாதாரம்பமென்றாலென்னை? பிரபவமுதலிய சௌர வருடங்களை சாந்திர வருடங்களா யிருப்பதுபோல் சௌரமாதங்களை சாந்திரமாதங்களாயிருப்பதை யுணர்ந்தும் உணராதார்போல் அம்மாதங்களை வேறு வேறாக்கிவிட்டனர். பங்குனிமீ சுக்கிலப்பிரதமை வருடாரம்பமெனக் கொள்ளாது, சித்திரைமாத சுக்கிலப்பிரதமை வருடாரம்பமெனக் கொண்டாலென்னை? இங்ஙனங் கொள்ளுதற்கும் கொள்ளாதிருத்தற்கும் ஆதாரமுண்டாயிற் காட்டவேண்டும். இதுகாறுங் கூறியுள்ள ஞாயங்களைக்கொண்டு நடுநிலையோர் நுணுகி ஆராய்வார்களாயின் அவர்க்கு உண்மை விளங்காதுபோகா. ஓர் நிலையோர் எவ்வாறாய்ந்திடினும் அவர்கட்கு உண்மை விளங்கவே மாட்டாது.



ஆகலின், சாந்திரமானிகள், 'ஆசுவயுஜ' மென்னும் சௌரமாதத்தையே சாந்திரமாதமாகக் கொண்டு அம்மாதம் இக்குரோதன வருடம் புரட்டாசி மாதம் 4-ந் தேதி ஆரம்பமாக வைத்து, அம்மாதம் கிருஷ்ண சதுர்த்தசியான புரட்டாசிமாதம் 30உ தீபாவளி யேற்படுத்தி யிருக்கின்றனர். இவ்வேற்பாட்டிற்கு சாந்திரமான நூல்களே சிறிதும் இடங்கொடாமையால் அவ்வேற்பாடு தள்ளற்பாலன. அன்றிக் கொள்ளற்பாலனவன்று.

'சுதேசமித்திர'னில் இக்குரோதனஞு ஆவணிமீ 7உ வெளிவந்த அநுபந்தத்தில் 'நரகசதுர்த்தசி அல்லது தீபாவளி நிர்ணயம்' என்று தலைப்பிட்டு புரட்டாசிமீல் தீபாவளி கொண்டாடுவது முற்றிலும் தவறு என்று எடுத்துக்காட்டியிருந்தோம். பலபெரியோர்களும் அவ்வுண்மையையே பத்திரிகைகள்மூலமாகவும் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் எடுத்தியம்பினர். உண்மையறியாதார் பலர் மயங்கி புரட்டாசி மாதத்திலேயே தீபாவளி கொண்டாடினரென அறிகிறோம். இது முற்றிலும் தவறாதலின் அவர்கள் திரும்பவும் திருவாவடுதுறை யாதீன சோதிட வித்வான் திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் கணித்து வரும் நம் 'சைவப் பஞ்சாங்க'த்தில் கண்டபடி நிகழும் ஐப்பசிமீ 29உ இரவில் தீபாவளியை அநுஷ்டிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

---

# இமயத்தில் புலிக்கொடி பொறித்தது

[கோயமுத்தூர், சி. கு. நாராயணசாமி முதலியார்]

### தொண்டை மண்டல சதகம்

யுகமேழு கோடி யிருப திலக்கமு முள்ளமட்டுஞ்
சகமேழு மேழும் புகழே நிறுத்தித் தமிழ் புனைந்து
புகழ்மேழி வானைப் பதாகையும் வீரப் புலிக்கொடியு
மகமேரு விற்சென்று தீட்டியதாற் றொண்டை மண்டலமே.

### பொழிப்புரை

ஏழுகோடியே இருபது லக்ஷம் யுகமளவும், பதினன்கு லோகத்தும் புகழும்படிக்குள்ள பாமாலை புனைந்து புகழப்பட்ட மேழிக்கொடியையும், தங்கள் வீரத்தாலும் புகழாலும் பெற்ற பராக்கிரம முள்ள புலிக்கொடியையும் இமயமலையிற் சென்று அம்மகா மலையில் வேளாளர் எழுதி வைத்திருக்கின்றதும் இத் தொண்டை மண்டலம்.

### வரலாறு

இமயமலையில் பாயும் புலிக்கொடியைத் தமது திக்குவிஜயத்தின் ஞாபகார்த்தமாக எழுதுவித்தவனும், "முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய, புறஞ்செவி வாரணம் புக்கிய" உறையூரில், கி. மு. முதல் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தே "உருவ பஃறேர் இளஞ் சேன்னிக்கு, அழுந்தூர் வேள்மகளிடத்தே கருவிலே திருவாயுதித்தவனும்; பாணர், நக்கீரர், மாமூலர், முடத்தாமக் கண்ணியர், கருங்குழலாதனார், கழாத்தலையார், முதலிய நல்லிசைப் புலவர்களால் புகழ்ந்துபாடும் பெருமை படைத்தவனும், உருத்திரங் கண்ணனாரால் "பட்டினப்பாலை" பாடப்பெற்றவனும், நீதித்திறம், போர்வலிமை, ராஜ தந்திர சூழ்ச்சி, தைரியம், வீரம், ஆண்மை முதலிய பலவகையினும் தனக்கொப்பாரு மிக்காரு மில்லாச் சிறப்புடையவனும், பெருவீரனுமாய் விளங்கிய கரிகாற் பெருவளத்தான் சேர, பாண்டியர் முதலிய ஏனைய பேரரசர் எவரும் தன்னை எதிர்த்துப் போர்செய்யும் வன்மை யற்றவரா யிருப்பக்கண்டு, போரிலே பேராசையும், தோள் தினவும் உடையவனாய் வடதிசை பெருந்திசை யாதலால், அங்கேனும் பகை பெறலாம் என்றெண்ணிப்



போர் விருப்பத்தோடு புறப்பட்டுச்செல்ல, அங்கும் தன்னை எதிர்ப்பவர் காணப்படாமையால் அப்பாற் செல்லு மளவிலே மலைக்கரசாக விளங்கும் இமயம் வழிமறித்துக் குறுக்கிடுவது போல இவனெதிரிற் காணப்பட, இதுகண்ட கரிகாலன் இது பகையாநின்று என்னை மறித்து எதிரிட்டது என்று கருதி கோபங்கொண்டு அதனைப் புறங்காண்பதற்காகவும் அதற்கு வடக்கிலும் தனது ஆணை செல்வதற்காகவும், தனது புயவலியும் ஜயசீலத்தையும் பகைவர்க் குணர்த்தவுமாகச் சாத்தன் என்னும் தெய்வத்தின் அருளால், தான் காஞ்சியில் பெற்ற செண்டெனும் ஆயுதத்தை அவ்விமய மலையிலடித்து அதன் செருக்கடக்கி அம்மலையின் மேற்புரத்திலே தனது கொடியாகிய புலியை வெற்றிக்கு அடையாளமாகப் பதிவித்துக் கோபந்தணிந்து மீண்டனன் என்பதாம். இதற்குச் சான்றாக

"கலியுகத்தி லிலங்குவேற் கரிகாற் பெருவளத்தோன்
வன்றிறற் புலியிமய மால்வரைமேல் வைக்க வேகுவோன்"
(பெரியபுராணம்)

"இமையவ ருறையுஞ் சிமையம் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோன்"
(சிலப்பதிகாரம்)

"வலியுடை வல்லணக்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி" (பட்டினப்பாலை)

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவல்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்-கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பக் கிரிதிரித்த செண்டு"
(சிலப்பதிகாரம் உரைமேற்கோள்)

"செண்டு கொண்டுகரி காலனொரு காலிலிமயச்
சிமயமால் வரை திரித்தருளி மீளவதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்புலிப் பொறி குறித்தது மறித்த பொழுதே"

"விரித்த வாளுகிர் விழித்தழற் புலியை
வீதுவைக்க விமயத்தினைத் திரித்தகோல்" (கலிங்-பரணி)

"செண்டினாலிமகிரி திரித்திரு சென்னி"
(வில்லிபாரதம்)

"தெள்ளருவிச் சென்னிப் புலியேறிருத்திக் கிரிதிரித்து"
(விக்கிரம சோழனுலா)

எனப் பிறநூல்கள் வியந்தோதுவதாலும், புலிக்கொடியை இமயத்தில் தீட்டிப் புகழ் சிறந்தவன் கரிகாலனென்று தெரிவதாயிருக்கப் படிக்காசுப் புலவர் தமது தொண்டை மண்டல சதகத்தின் 98-ம் செய்யுளில் வேளாளர் தீட்டியதாக ஆதாரங்காட்டுவது எக்காரணமா யிருக்கலாமெனச் சிலர் கருதலாம். அது, கரிகாற்சோழன் வேளாண் மரபில் வந்த அழுந்தூர் வேள் மகளுக்கு மகனாகத் தோன்றியும், தானும் அம்மரபில் வந்த நாங்கூர் வேள் மகளை மணந்து கொண்டதனாலும் அவ்வுரிமை பாராட்டி அவர் புகழ் தம் புகழாகக் கொண்டனர் போலும், எனத் தெளிதல் வேண்டும்.

—'கலாசிந்தாமணி'

---

# தமிழர் கலைக்கழகம்

[வி. சங்கரலிங்கம் பிள்ளை]

தமிழ்நாட்டிற்குத் தனியே ஒரு கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்ற கருத்து சில நாட்களாகப் பல தமிழ் நன்மக்களது நினைவில் முற்பட்டு உலவுகின்றது. தெலுங்கு நாட்டிற்குத் தனியே ஒரு கலைக்கழகமும் மலையாள நாட்டிற்கு அப்படியே பிறிதொன்றும் அமைந்தபின்பு, கன்னடத்திற்கு மைசூர் கலைக்கழகம் அமைந்திருப்பதனாலே, சென்னையில் இப்போதுள்ள கழகத்தினையே தமிழ்க்கழகமாக ஏன் ஆக்கிக் கொள்ளுதல் கூடாது என்ற கேள்வி ஒருபுறம் எழுகின்றது. இப்பொழுதுள்ள சென்னைக் கலா சங்கத்தில் வடமொழியாளர் தம் மொழிக்கு வேண்டிய நன்மைகளை மிகுதியாகச்செய்து தமிழ் வளர்ச்சியைக் கருதாமலிருப்பது அங்ஙனம் ஆக்கிக்கொள்ள முடியாமைக்கு ஓர் காரணமாகுமா? இன்னொரு கலைக்கழகம் நிலைநாட்டுதற்குச் சென்னை சட்டசபையார் புதுச்சட்டம் ஒன்று ஏற்படுத்துதற்குப் பதிலாக இக்கலைக்கழகத்திற்கே தமிழ் வளர்ச்சிக்குத்தக்க வண்ணம் திருத்தச்சட்டம் அமைத்தல் முடியாதா?



அல்லது தமிழ் மக்களது கல்வி வளர்ச்சியைக் கருதுவதற்கு அவருள் ஒரு பகுதியாரே மிக்க அதிகாரம் செலுத்துதற்கிடமாயிருக்கின்ற சென்னைக் கலைக்கழகம் பயன்படாதோ? சட்டசபையில் அவ்வொரு பகுதியாரை யொழித்த பெரும்பகுதியாரது பிரதிநிதிகளின் எண்ணம் பாதிக்கு மேற்பட்டிருக்கும்படி செய்திருப்பதுபோலக் கலைக்கழகப் பெருஞ்சபை (Senate) யிலும் அதன் அதிகாரமிக்க உட்கழகத்திலும் (Syndicate) அப்பகுதியா ரல்லாதாரது ஆட்சி நிலைக்கும்படி இடங்களைச் சேமஞ் (Reservation) செய்துவைத்தல் கூடாததொன்றா? அல்லது புதிதாக ஏற்படுந் தனிக்கலைக் கழகத்திற்றான் இந் நோக்கங்களைச் செம்மையாக நிறைவேற்றமுடியுமா? இப்பொழுது ஏற்படும் கலைக்கழகம் மொழிவளர்ச்சிக்கு மாத்திரமா, தமிழருட் பெரும்பான்மையோர் கல்வி வளர்ச்சிக்கும் பயன்படுவதற்கா? இவ்வினாக்களுக்கு விடைகளை புதுக்கலைக்கழகக் கமிட்டியார் ஆராய்ந்து முடிவுசெய்தல் விரும்பற்பாலதாகும்.

சென்னையில் ஒருகலைக்கழக மிருந்தாலும் திருச்சியிலும் பிறிதொன்று இருத்தல் வேண்டுமென்ற ஒரே கொள்கையையே முக்கிய நோக்கமாக அவர்கள் கொள்ளின் அது தமிழர் கலைக் கழகம் என்பதை நிலைநிறுத்தப் பயன்படுமோ என்ற ஐயம் நிகழ்கின்றது. இப்பொழுதுள்ள ஆங்கிலக் கலாசாலைகளின் தலைவர்கள் சென்னைக் கலைக்கழகத்தைத் தமிழ்மொழி யளவில் எப்படி நடத்துகின்றார்களோ அவ்வாறேதான் புதிதாக வருங் கலைக்கழகத்தை நடத்துதற்குரிய சூழ்ச்சிகளைக் கூறுவார்களாயின் அவைகள் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்மக்களுட் பெரும்பான்மையோர் அறிவு வளர்ச்சிக்கும் தக்கனவாக இருத்தல் அரிது. தமிழிலே ஆங்கில நுண்ணூல்களை மொழிபெயர்க்கவும், வடமொழியிலும் பிறமொழியிலுமுள்ள அரிய நூல்களை மொழிபெயர்க்கவும், தமிழ்நாட்டில் பல இடங்களிலுமுள்ள பல்வகைக் கலைத்துறைகளுக்குரிய ஏடுகளியாவற்றையுஞ் சேர்த்து அவற்றை ஒத்துப்பார்த்து அச்சியற்றவும், தமிழிலே புதுக்கதை (Novel) களாகப் பிழையோடு எழுதப்படுகின்ற புத்தகங்களைத் திருத்தஞ்செய்யவும், பிழை மிக்கனவற்றைக் கண்டித்து ஒதுக்

166172



வும், தமிழ் இலக்கணம், சங்கநூல், நீதிநூல், பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், சமயநூல், சோதிடநூல், மருத்துவநூல், யோகநூல், இசைநூல், கணக்குநூல், ஓவியம், சிற்பம் முதலியவற்றைத் தனித்தனி செம்மையாக ஆராய்ச்சி செய்யவும்; ஆங்கிலத்திலேயுள்ளபடி பலவகைப் பேரகராதிகள் அமைக்கவும் வேண்டிய நிலையங்கள் ஏற்படுகின்றவரை தமிழ்வளர்ச்சி செம்மையாக நடைபெறமுடியாது. தமிழ் மொழியைத் தலைமையாகவும் பிறமொழிகளைத் துணைகளாகவும் புதுக்கலைக்கழகத்தில் ஏற்படுத்தாமல் சென்னைக் கலைக்கழகத்திலுள்ளபடி வடமொழிக்கே ஏழு, எட்டு சிரோமணிப்பட்டங்களையும், வித்துவான் பட்டங்களையும், ஆராய்ச்சிப்பட்டங்களையும் பெருக்கிவிடப்படுமானால் தமிழ்வளர்ச்சிக்கு வேண்டிய பணம் இல்லாமற் போகும். தமிழ்மக்களது செல்வமும் அவர்கள் தாய்மொழியைப் போற்றுதற்குப் பயன்படாதொழியும்.

இனி, தொழிற் கல்விகளைச் செம்மையாகத் தழைத்தோங்கும்படி செய்வதற்குரிய முயற்சிகள் புதுக் கலைக்கழகம் அமைப்போரால் கவனிக்கப்படுவதற் குரியன. தமிழ் மக்களுட் பெரும்பான்மையோர் நன்கு கற்றுத் தேர்ந்து ஊதியம் பெறுவதற்குப் பயன்படாமல் இப் புதுக்கலைக்கழகம் ஏற்படுமானால் தமிழ்ச் செல்வர்களது பணம் வீணே வாரி இறைத்ததாக முடியும். தமிழருள் கற்ற ஒரு பகுதியாரைத்தவிர ஏனைப் பெரும்பான்மையோர்களுள் போதகாசிரியர்கள் வேண்டிய அளவிருக்கின்றார்களோ என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. அரசாங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டிருத்தல்போல இதிலும் ஏற்படாமற்போனால் தமிழ் தமிழெனச் சொல்லிக்கொண்டு தமிழர் பெரும்பணத்தைச் சூழ்ச்சி மிக்க ஒருவகையார் தமக்கே பயன்படுத்துதல் கூடும். ஆதலால் இங்குக்கூறிய எல்லாவற்றையும் உற்றுநோக்கித் தமிழரிற் பெரும்பான்மையோர்க்குந் தெளிவான நிலைத்தபயன் ஏற்படும்படி இக்கலைக்கழகத்தை நிலைநிறுத்த முன்வரும் யாவரும் தக்க முயற்சிசெய்தல் வேண்டும்.

Printed by Sivakami Vilasam Press: Published by V. Subbiah for The S. I. S. S. W. P. Society, Ltd., Madras.

## அழகிய உரைநடை நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| மனுமுறை கண்ட வாசகம் | 0 | 8 |
| அறிவு விளக்க வாசகம் | 0 | 5 |
| என் கடன்பணி செய்து கிடப்பதே | 0 | 8 |
| முருகன் | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் | 0 | 8 |
| மங்கையர்க்கரசி | 0 | 5 |
| சீவகாருண்ய ஒழுக்கம் | 0 | 4 |
| அறிவுரைத் திரட்டு | 0 | 12 |
| சிவஞான சுவாமிகள் உரைச்செய்யுள் (கவிக்கா கட்டடம்) | 1 | 12 |
| மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை | 1 | 4 |
| திருவிளையாடற் புராண வசனம் | 1 | 4 |
| பெரிய புராண வசனம் | 1 | 4 |
| பிரபஞ்ச விசாரம் | 1 | 8 |
| நால்வர் சரித்திரம் | 0 | 12 |
| கந்தபுராண சாரம் அல்லது ஷண்முக விஜயம் | 0 | 12 |
| சைவக்கிரியை விளக்கம் | 0 | 8 |
| கள்ளர் சரித்திரம் | 1 | 0 |
| கபிலர் சரித்திர ஆராய்ச்சியுரை | 1 | 4 |
| நக்கீரர் | 0 | 8 |
| கட்டுரைத் தொகுதி | 1 | 0 |
| மணிமேகலைக் கதைச் சுருக்கம் | 0 | 10 |
| உதயணன் கதைச் சுருக்கம் | 1 | 4 |
| திருவள்ளுவர் சரித்திரம் | 0 | 10 |

# தமிழ்ப்பொழில்

இஃது ஓர் அரிய தனித்தமிழ் நடையில் நடைபெ
சஞ்சிகை. இது தஞ்சை கரந்தைத் தமிழ்ச்சங்கத்தினின்
வருகின்றது. இது பல அறிஞர்கள் கட்டுரைகளைக் கொ
கின்றது.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டின் | ஆண்டுக்கையொப்பம் | ரூ | |
| ,, | மாணவர் கட்கு | ,, | |
| வெளிநாட்டின் | | ,, | |
| ,, | மாணவர் கட்கு | ,, | |

தனிப் பரதி 0—4—0

## இலக்கண நூல்கள்

| | | |
|---|---|---|
| தொல்காப்பியம் - எழுத்து-நச்சினார்க்கினியம் | ரூ | 4 |
| ,, சொல்-சேனாவரையம் | | 3 |
| ,, ,, பேராசிரியம் (calico) | | 2 |
| ,, ,, உயர்ந்தகட்டடம் | | |
| நன்னூல் மூலம் | | 0 |
| நன்னூல் சங்கரநமச்சிவாயப் புலவர் விருத்தியுரை உ. வே சாமிநாதய்யரவர்கள்பதிப்பு | | 2 |
| ஐந்திலக்கணப்பகுதி-க, | | 0 |

| | |
|---|---|
| குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம் குறிப்புரையுடன் | 3 |
| அகத்தியர் தேவாரத்திரட்டு உரையுடன் | 1- |
| திருக்கைலாய ஞானவுலா குறிப்புரையுடன் | 0 |
| சேக்கிழார் பிள்ளைத்தமிழ் குறிப்புரையுடன் | 0- |
| மெய்கண்ட சாத்திரம் ஆராய்ச்சி முன்னுரையுடன் | 2 |
| சைவசித்தாந்த சந்தானசாரியர் சரித்திரம் | 0 |

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமி
306, லிங்கசெட்டித் தெரு, செ